
# திருக்கோயில்

ஆகஸ்ட் 1993 விலை ரூ. 3



வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் ஆலயத்தில் 15-8-93 சுதந்திரத் திருநாளில் நடைபெற்ற சிறப்புவழிபாடு மற்றும் பொது விருந்து விழாவில் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திருமிகு இரகுபதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். சட்டப் பேரவை ஆளும் கட்சி கொறடா திருமிகு ஜெய்குமார் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரி திரு உதயராஜ், பி.ஏ. அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

முகப்பு:
பிள்ளையார்பட்டி
அருள்மிகு கற்பக விநாயகர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை: 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஸ்ரீமுக ஆண்டு ஆவணி
ஆகஸ்ட் 1993 விலை ரூ. 3-00 | மணி: 8

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம்
—அறநிலையத்துறை ஆணையாளர் திருமதி சி.கே. கரியாலி, ஐ.ஏ.எஸ்.,

அருள்மிகு பேரூர் பட்டீசுவரர் ஆலய தரிசனம்
—ஜி. கல்யாணம், எம்.ஏ.,

நம்நாட்டுச் சித்தர்கள்
—டாக்டர் இரா. மாணிக்கவாசகம்

உள்ளத்தில் உண்மையொளி
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

உமைபங்கர் திருவடிவின் அமைப்பும் விளக்கமும்
—டாக்டர் மருததுரை

கீதைக்குறள்கள்
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

நாராயணா என்னும் நாமம்
—புலவர் பரந்தாமன்

அஞ்செழுத்தின் மகிமை
—முத்துகிருஷ்ணன்

வினைவழி உயிர்
—வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.,

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்
—டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# மயிலை கபாலீஸ்வரர் திருக்கோவில்


சி. கே. கரியாலி, இ.ஆ.ப

ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சென்னை-600 034.


சென்னை நகரின் ஆத்மாவாகவும் தமிழகத்தின் இதயமாகவும் திகழ்வது பழம்பெரும் நகரமாகிய மயிலாப்பூர். சென்னை தோன்றுவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே மயிலாப்பூர் இருந்துள்ளது.


இந்த நகரின் தொன்மையான சமஸ்கிருத பெயர் மயூரபுரி என்பதாகும். இதுவே தமிழில் மயிலாப்பூர் என்று பொருத்தமாக மருவியுள்ளது. பார்வதி அன்னை மயூர வடிவம் அல்லது மயில் வடிவம் எடுத்து இந்தப் புண்ணிய தலத்தில் சிவபெருமானை வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது.

சைவ சமயத்தைச் சேர்ந்தஞானக்கவிஞர்கள் பலரால் கபாலீஸ்வரர் திருக்கோவிலின் இறைவன் புகழ்ந்து பாடப்பட்டுள்ளார். இந்தத் தெய்வக்கவிஞர்களுக்கு நாயன்மார்கள் அல்லது ஞானிகள் (சமஸ்கிருதத்தில் ஞானி என்பதற்கு அனைத்தும் அறிந்தவர் என்பது பொருள்) என்று பெயர். அவர்களால் பாடப்பட்ட தெய்வீகத் திருப்பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர். இவை வடமொழியில் தேவ ஆராதனம் (இறைவனை நோக்கிப் பாடிய பக்திப் பாடல்கள்) எனப் பொருள்படும்.

எல்லாச் சைவக் கோயில்களில் காலையிலும் மாலையிலும் தேவாரப் பாடல்கள் ஓதப்படுகின்றன. திருக்கோயில் வழிபாட்டிலும் சடங்குகளிலும் இவற்றுக்குச் சிறப்பான ஓர் இடம் உண்டு. வேத மந்திரங்கள் ஓதி முடிக்கப்பட்டவுடன் இந்தப் பாடல்கள் ஓதப்படும். அண்மையில் பல்லாண்டுகளாக நடைபெற்று வந்த கருத்து முரண்பாடுகளுக்குப் பிறகு தேவாரம் பாடுவதையும் சங்கீத நாடக அகடமி ஒரு கலை வடிவமாக ஏற்றுக் கொண்டுள்ளது. தேவாரம் ஓதுவதற்கான முதல் சங்கீத நாடக அகடமி விருது அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் ஓதுவார் மூர்த்திகளாகிய திரு. லால்குடி சுவாமிநாதன் அவர்களுக்கு தேவாரப் பாடற்கலைக்காக வழங்கப்பட்டுள்ளது.

## அறுபத்து மூவர் திருவிழா

தமிழகத்தின் ஞானக் கவிஞர்களாகிய இந்தப் பெருமக்கள் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்துவதன் மூலமாகத் தமிழுக்கும் இறைவனைப் பற்றிய நினைவைப் பக்தர்கள் உள்ளத்தில் தொடர்ந்து வளர்ப்பதன் மூலம் பக்தி இயக்கத்திற்கும் தனிப் பெரும் தொண்டாற்றியிருக்கிறார்கள். இதனால் கபாலீஸ்வரர் திருக்கோயிலின் மிக முக்கியமான விழாவாக அறுபத்து மூவர் விழா கொண்டாடப்படுகிறது. பங்குனித் திருவிழாவில் 8ஆம் நாள் விழாவாக இது அமைகிறது. இந்த விழாவின் சிறப்பம்சம் மிக நீளமான ஊர்வலமாகும். சிவபெருமான் சூலம் ஏந்தி வலப்புறத்தில் உடன் பிரியா நாயகியாகிய அம்பாளும், இடப்புறத்தில் வள்ளி தெய்வானையுடன் கூடிய அருமைப் புதல்வன் சிங்காரவேலனும் வீற்றிருக்கப் பவனி வருகிறார். அவரைத் தொடர்ந்து விநாயகர், சண்டிகேஸ்வரர் ஆகிய தெய்வங்களும் பவனி வருகின்றனர். அவர்களுக்குப் பிறகு ஒவ்வொரு பல்லக்கிலும் நான்கு பேராக ஞானக்கவிஞர்களாகிய அறுபத்து மூவரும், பல்வேறு பல்லக்குகளில் பக்திப் பெருக்கோடு பின் தொடர்கிறார்கள். பங்குனித் திருவிழாவின் எட்டாம் நாளன்று பிற்பகல் 3 மணியளவில் தொடங்கி மயிலாப்பூர் தெருக்களில் இந்தப் பவனி நடைபெறுகிறது.



இறவாப் புகழ் படைத்த ஞானியருக்கு பக்தர்கள் செலுத்தும் தனிச் சிறப்புள்ள மரியாதை இதுவாகும். இவர்கள் பாடியருளிய பாடல்கள் மூலமாக பக்தர்கள் இறைவனுக்கு நெருக்கமாக முடிகிறது. எனவே இந்த விழா மூலமாக தங்கள் நன்றியை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்.

அத்வைத சித்தாந்தத்தின்படி சிவனுக்கும் ஞானியருக்கும் பேதம் என்பது இல்லை. எனவே சிவபெருமானின் பல்வேறு வடிவங்களாகவே நாயன்மார்களைக் கருதலாம். இந்த வகையிலும் அவர்களுக்குச் செய்யப்படும் வழிபாடு பொருத்தமுள்ளதாகும்.

## திருக்கோயில் தேர்த்திருவிழா

அறுபத்து மூவர் விழாவிற்கு முதல் நாள் அதாவது பங்குனிப் பெருவிழாவின் 7-ஆம் நாளில் இந்த ஆலயத்தின் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

தேர்த் திருவிழா என்பது ஒரு தனிச் சிறப்புள்ள நிகழ்ச்சியாகும். இறைவன், ஒரு தங்க வில் தாங்கி, மணிகள் பறிக்கப்பட்ட அம்பை யேற்றி, வேடன் வடிவில் அலங்கரிக்கப்பட்ட பெருந்தேரில் ஏறித் தீமையை மாய்க்க வருகிறார்.

தேர், வாழ்க்கை என்னும் யாத்திரையை பிரதிபலிக்கிறது. பூமிதேவியின் மீதுதான் தேர் யாத்திரையும் வாழ்க்கை யாத்திரையும் நடைபெறுகின்றன. தேர்ச்சக்கரங்களுக்கு முன் வீசப்படும் உப்பு வாழ்க்கையின் உப்பு ஆகும். இலட்சக்கணக்கான மக்கள் நான்கு மாடவீதிகளிலும் தேர் இழுப்பதற்காகவும் 'தேவவேடனின்' தரிசனம் பெறுவதற்காகவும் பெருந்திரளாகக் கூடி நிற்கிறார்கள்.

தேர் இழுப்பது என்பது ஒரு மாபெரும் சமூக ஆன்மீக அனுபவமாகும். இது எல்லாவற்றையும் சமப்படுத்தும் பேராற்றல் படைத்தது. தேர் இழுக்கும்போது செல்வர் ஆனாலும் ஏழை ஆனாலும், உயர்ந்தவரானாலும், தாழ்ந்தவரானாலும், வலியவரானாலும் மெலியவரானாலும் இறைவனுக்கு முன் எல்லோரும் சமம் என்னும் தத்துவத்தின் குறியீடாக இது விளங்குகிறது. மேலும் மண்ணில் நடைபெறும் மனித வாழ்வு எல்லோருடைய கூட்டு முயற்சியும் ஆகும் என்பதன் விளக்கமாகவும் இது அமைகிறது. வடம் தொட்டு இழுக்கும் ஒவ்வொரு முறையும் 'கபாலி' 'கபாலி' என்று பக்தர்கள் அழைக்கும் பரவசக் குரலைக் கேட்கலாம்.

ஒவ்வொரு சமயம் இறைவன் திருவிளையாடல் புரிவதுண்டு. திடீரென்று தேர் நிற்கிறது. நகர மறுக்கிறது. தேர் செல்லும் பாதையில் எதிர்பாராத தடைகளை உண்டாக்கி இறைவன் பக்தர்களைச்சோதிக்கிறான். கற்களும், தரையில் குண்டு குழிகளும் திடீரெனக் காட்சியளிக்கின்றன. வடம் அறுந்து விடுகிறது. சக்கரங்கள் கழன்று விடுகின்றன. அல்லது தேரின் அலங்காரப் பொருட்கள் விழுந்து விடுவதுபோல் தொங்குகின்றன. பல்வேறு வழிகளில் இறைவன் இதை ஏற்படுத்து

கிறான். ரத யாத்திரையை முறையாக நிறைவு செய்வதும், குறிப்பிட்ட காலத்தில் திருக்கோயிலுக்குத் தேரைக் கொண்டு வருவதும் இறைவன் பக்தர்க்கு வைக்கும் சோதனையாகும். தெய்வ மாதாவாகிய அன்னையின் அருளோடு இது நிறைவேற்றப்படுகிறது. அம்பாள் இறைவன் தன் இருப்பிடம் வந்து சேரும் வரை பிரார்த்தித்து கொண்டே இருக்கிறாள். அம்பாளின் அருளாசியோடு ஒரு குறையுமில்லாமல் தேர்த்திருவிழா இனிது நிறைவடைகிறது.

## தெய்வத் திருமணம்

அறுபத்து மூவர் விழாவிற்கு அடுத்த நாள் சிவபெருமானுக்கும் அன்னை பார்வதிக்கும் பின் மாலைப்பொழுதில் திருமணம் நடக்கிறது. (மங்கல நாண் அணிவித்தல் போன்ற) சகலவிதமான சடங்குகளோடு திருமணம் நிகழ்த்தப்படுகிறது.

## இந்திய மரபில் திருமணம்

இந்து புராணங்களும், இந்து மரபும் திருமணத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றன. திருமணமே ஒரு மனிதனை முழு மனிதனாக்குகிறது. கடவுளையும் முழுமையாக்குவது திருமணமே. இல்லற அனுபவம் என்பது இல்லாமல் முழுமையோ, ஞானமோ பெற இயலாது. எந்த முயற்சியிலும் சரிபாதி பங்குதாரராக ஒரு பெண் இல்லாவிட்டால், எதையும் சாதிக்க இயலாது என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது.

சிவபெருமானின் அர்த்த நாரீசுவரர் வடிவம், ஆண் பெண் கூறுகள், ஆற்றல்கள் ஆகியவற்றின் இணைப்பே இறைவன் என்பதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

ஒவ்வொரு தெய்வமும் தன் துணைவியோடு விளங்குகிறது. சிவபெருமானுக்கு ஒரு சந்நிதி அமையுமானால், அங்கு அம்பாளுக்கும் ஒரு சந்நிதி அமையும். இந்து சடங்குகளை ஒரு பிரம்மாச்சாரியோ, மனைவியை இழந்தவரோ செய்யக்கூடாது. திருமணமான ஒரு மனிதன் தன் மனைவியோடு தான் இவற்றைச் செய்ய வேண்டும். இல்லத் தலைவி இல்லாமல் எந்த ஹோமமும் செய்யக் கூடாது. எந்த தர்மமும் தானமும் கன்னியாதானம்கூட தம்பதியரால் தான் செய்யப்பட வேண்டுமேயொழிய மனைவியை இழந்த ஒருவரால் செய்யப்படக் கூடாது. திருமணமான பிறகுதான் ஒருவர் சமயகுரு ஆக முடியும்.

மேற்குறித்தவற்றின் அடிப்படையில், மயிலாப்பூரில் நடைபெறும் தெய்வத் திருமணம் மிக முக்கியமான நிகழ்வாக அமைந்து ஆயிரக்கணக்கானவரால் கண்டு களிக்கப்படுகிறது. அவர்களைப் பொறுத்தவரை இறைவனுக்கும் இறைவிக்கும் ஏற்படும் திருமண இன்பம் என்பது போற்றத்தக்க நினைவு கூரத்தக்க ஓர் உண்மையான நிகழ்வாகும்.

## இறைவனின் பல்வேறு தோற்றங்கள்

மயிலாப்பூர் மக்களைப் பொறுத்தவரை இறைவன் அவர்களுக்கே உரியவன். குருவாக, வழிகாட்டியாக, பாதுகாவலராக, ஆசிரியராக நண்பராக, ஏன் ஒரு குழந்தையாகக் கூட பல்வேறு தோற்றங்களில் காட்சியளிக்கிறான்.

மயிலாப்பூரில் தனியாக வாழ்ந்துகொண்டு டில்லியில் வசதியாக வாழும் தன் குடும்பத்தாரோடுகூட சென்று வாழ மறுக்கும் ஒரு 80 வயது மூதாட்டி இவ்வாறு கூறுகிறார்.

''நான் இந்த இடத்தை விட்டுப் போய் விட்டால், கபாலீசுவரரும், கற்பகாம்பாளும் அநாதைகளாக ஆகி விடுவார்களே?''

அந்த மூதாட்டியைப் பொறுத்தவரை, இறைவன் ஒரு சின்னஞ்சிறு குழந்தை. அவருடைய அன்பும் பரிவும் தினசரி கண்காணிப்பும் தேவைப்படும் ஒரு சிறு குழந்தை.

மயிலாப்பூரில் கபாலீசுவரர் திருக்கோயிலில் வாயிலுக்கு அருகேதான் இயேசுநாதரின் சீடராகிய தாமஸ் முனிவர் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இயேசுவின் நற்செய்தியைத் தாங்கி வந்து போதித்தார் என்பது நினைவு கூரத்தக்கது. நீண்ட காலமாக தமிழக கத்தோலிக்க சர்ச்சின் தலைவர் 'மயிலாப்பூர் ஆர்ச்பிஷப்' என்றே அழைக்கப்பட்டு வந்தார். தற்போதுகூட, அவர் 'மயிலாப்பூர் மற்றும் சென்னை ஆர்ச்பிஷப்' என்றே அழைக்கப்படுகிறார்.

மயிலாப்பூர், தமிழகத்தின் தனிப்பெரும் மாமுனிவராகிய திருவள்ளுவர் பிறந்த இடமாகும். தெய்வத்தன்மையுள்ள இரண்டடிப் பாடல்களால் அவர் திருக்குறளைப் படைத்துத் தந்தார். திருக்குறள் சமயச் சார்பற்ற பெரு நூல் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இத்தகைய நூலைப்படைக்க இறைவனே ஊக்கியிருக்க வேண்டும் என்பதை யார்தான் மறுக்க முடியும்.

•

மயிலாப்பூர் இறைவன் எங்கும் நிறைந்தவர். அனைவருக்கும் வாழ்வளிப்பவர். அவர் நிச்சயமாக எல்லோருக்கும் உரியவராவார்.

# அருள்மிகு பேரூர் பட்டீசுவரர் ஆலய தரிசனம்



ஜி. கல்யாணம், எம்.ஏ.

தீராப் பிணிதீர சீவாத் துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாக் கிரிராச
பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமானே.

—அருணகிரிநாதர்.

கோவன் என்ற இருளர் தலைவன்ஒருவன் புதூர் ஒன்றை ஆக்கினான். அது கோவன் புத்தூர் என்பது; மருவி இப்போது கோயம்புத்தூர் என்ற பேரால் வழங்குகிறது. முன்னால் சிறு ஊராக இருந்து பின்னால் பெருநகராக ஆகிவிட்டது. அக்காலத்தில் பேரூராக இருந்தது மேலைச் சிதம்பரம் என்னும் திருப்பேரூர் தான், அது கோயம்புத்தூருக்கு மேற்கே நான்கு கல் தொலைவிலுள்ளது. அப்பதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருக்கிறது. அதை அரசவனம் (பிப்பிலாரண்யம்) தட்சிணகைலாசம், பிறவாநெறி என்றும் நூல்கள் கூறுகின்றன. பேரூர் ஒரு தேவாரவைப்புத்தலம். அப்பர் சுந்தரர் இருவரும் இத்தலத்தைப் பற்றி தேவாரத்தில் குறித்திருக்கின்றனர்.

பேரூர்ப் பெருமான் கோயில் இயற்கை வளம் நிறைந்த இடத்தில் விளங்குகிறது. மேற்கு மலைத் தொடரில் இதைச் சுற்றி வில் போல ஐந்து மலைகள் சூழ்ந்துள்ளன. அவை சிவமயமான வெள்ளிமலை, நீலிமலை என வழங்கும் உமாதேவியார் மலை, ஐயாசாமிமலை என்ற பிரமன் மலை, பெருமாள்முடி என்று அழைக்கப்படும் திருமால்மலை, முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள மருதமலை என்பன. நொய்யலாறு கோயில் பக்கத்தில் ஓடுவது இயற்கை காட்சியை மேலும் கவினுறச் செய்கிறது.

கோயில் வாயிலை இராஜகோபுரம் அழகு செய்கிறது; கிழக்கு நோக்கியமைந்திருக்கிறது. சுவாமி, அம்பாள் இவ்விரண்டு சந்நிதிகளும் கிழக்கு நோக்கியேயிருக்கின்றன. வெளிப் பிரகாரத்தில் தண்டபாணி, விசுவநாதர், விசாலாட்சி சந்நிதிகள்மேற்குப் பார்த்திருக்கின்றன. கனகசபை, கோவிலுக்குள்ளே நுழையும்போது வலதுகைப் புறமாக இருக்கிறது.


இத்தலத்திறைவன் சுயம்புமூர்த்தி, பட்டீசுவரர், பட்டிநாதர், கோட்டீசுவரர் என்ற திருநாமங்களையுடையவர். ஒரு பசுவானது பட்டி(தொழு)இட்டுஇறைவனுக்குப் பால் சுரந்தது. அதனால் பட்டீசுவரர் என்ற பெயர் வரலாயிற்று. பசுவின் கொம்பு குளம்புபட்ட வடுக்கள் இன்றும் சிவலிங்கத் திருமேனியில் காணலாம். இறைவியின் திருப்பெயர்கள் பச்சைநாயகி, மரகதவல்லி என்பன. அம்பிகை சந்நிதிக்கு ஈசான திக்கில் பட்டித் திருமால் எழுந்தருளியுள்ளார்; அப்பெருமானின் திருநாமம் இராஜகோபாலன் என்பது; அவர் சந்நிதிக்கு வலதுபுறம்மகாலட்சுமிசந்நிதியுமுண்டு. இந்த இரண்டு சந்நிதிகளுக்கும் தனி அர்ச்சகர் இருக்கின்றனர். கோயிலின் உள்ளடப்புப் பிரகாரத்தில் சேரமான் பெருமாளும், சுந்தரரும் எழுந்தருளியிருக்கின்றனர். சேரமான் காதில் குண்டலங்களுடன் அரசகோலத்தில் வெகு அழகாகக் காட்சியளிக்கிறார்.

எலும்புகல்லாதல், இறவாப்பனை, பிறவாப்புளி, செம்பு பொன்மயமாதல், சாணம் புழுக்காமல் இருத்தல், பறவைகள் வலது செவிமேல் வைத்து இறத்தல் முதலியவற்றை இத்தலத்திற்குத் தனிச் சிறப்புக்களாகக் கூறுகின்றனர். நொய்யலாற்றைக் காஞ்சிமாநதியென்பர். இறந்தோரின் எலும்புகளை அவ்வாற்றில் இத்தல எல்லைக்குள் இட்டால் கொஞ்ச காலத்தில் கற்களாகமாறிவிடுகின்றன.

பட்டீசர் கோயிலுக்குமுன் தென்கிழக்காக ஒரு மேடை மேல் பிறவாப்புளி இருக்கிறது. இதன் விதைகள் முளைப்பதில்லை. இறவாப்பனை என்ற மரம் வடகயிலாயம் என்ற கோயில் பிரகாரத்தில் இருக்கிறது. இந்தக் கோயிலுக்குள்ளேயே பிரமதீர்த்தம் இருக்கிறது. பைத்தியம், நாய்க்கடி இவை இத்தீர்த்தத்தில் ஆடுவோருக்குத்தீரும் என்பர். செப்புக் காசுகளை இதில் போட்டால் களிம்பு போய் பொன்மயமாக மாறுகிறது. இந்த தல எல்லைக்குள் பசுசாணம் (கோமயம்) புழுக்கிறதில்லை. பறவைகள் இறந்து விழுந்தால் அவைகளின் வலது காதுகள் மேல்பக்கமாகவே பூமியில் படாமல் இருக்கின்றன.

பட்டீசர் கோயிலுக்குள் சிருங்கதீர்த்தம் இருக்கிறது. அதை இப்போது சிங்கதீர்த்தம் என்று வழங்குகின்றனர். இன்னும் மாதையன் என்ற அமைச்சர் ஒருவர் கட்டிய பதினாறு கோணமுள்ள தெப்பக்குளமும் உண்டு. காஞ்சி மாநதியில் சோழன் துறை என்ற நீராடுமிடம் சிறப்புடையது. திருநீற்றுமேடு என்ற இடத்திலிருந்து வெட்டியெடுக்கப்படும் மண்வெண்மையாகத் திருநீறுபோல் இருக்கிறது.

இத்தலத்தில் இன்னும் சில கோயில்கள் உள்ளன. காஞ்சி வடபுறம் வசிட்டலிங்கம் கோயில் இருக்கிறது. மாதேசுவரர் கோயில்: அழகிய சிற்றம்பலம், அரசம்பலவாணர்கோயில் பட்டிவிநாயகர் கோயில், வடகயிலாயம், தென் கயிலாயம், மூர்க்கம்மன்கோயில் இவைகள் உள்ளன. அரசம்பலவாணர் கோயிலை சின்ன கோயில் அல்லது காலவேசுவரம் என்பர். நட



ராஜப் பெருமான் திருநடனம் செய்த பெரிய அரசமரம் இக்கோயிலிலுள்ளது. கோயில் வாயிலில் கோபுரத்துக்குப் பதிலாகப் பெரிய இடபம் மாடிமேல் இருக்கிறது. பட்டி விநாயகர் கோயிலின் கீழ்தான் நச்சுப்பொய்கை இருப்பதாகக் கூறுகின்றனர். சாந்தலிங்க அடிகளாரின் சமாதிக்கோயிலும் மடமும் பட்டீசர் கோயிலுக்குக் கிழக்கே சற்று தொலைவில் இருக்கிறது.

இத்தலத்தைப் பற்றியெழுந்த நூல்களும் பாடல்களும் எண்ணிறந்தன. அப்பர் சேத்திரக் கோவையில் 'பேரூர் பிரமபுரம் பேராவூரும்' என்றும், 'அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற்றுள்ளார் ஆரூரார் பேரூர் அழுந்தாருள்ளார்' என்றும் கூறியிருக்கிறார். சுந்தரர் திருக்கச்சியனேகதங்காவதம் தேவாரத்தில் 'குடகத்திலையம்பல வாணனின் றாடல்' என்று மேலைச் சிதம்பரம் என்பதைக் குறிப்பாக உணர்த்தியுள்ளார். இன்னும் அவரே தில்லையில் நடனத்தைக் கண்டபோதுபேரூரை நினைக்கிறார். 'மீகொங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே' என்கிறார். காஞ்சி நதியான நொய்யலாற்றையும் குறிக்கிறார். 'பேரூர் உறைவாய்ப்பட்டிப் பெருமான் பிறவாநெறியானே' என்றும் ஊர்த்தொகையில் பாடியிருக்கிறார். மாணிக்க வாசகர் திருக்கோவையாரில் 'அரசம்பலத்து நின்றாடும்பிரான்' என்று அரசம்பலத்தை கூறுகிறார். சேக்கிழார் ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணத்தில் ''மீகொங்கிற் காஞ்சிவாய்ப்பேரூர் குறுகினார்'' என்று சொல்லியிருக்கிறார். அருணகிரிநாதர் இத்தலத்திற்கு இரண்டு திருப்புகழ்ப்பாடல்களை ஓதியுள்ளனர். ஒன்றில் 'பட்டியாள்பவர் கொட்டியாடினர் பாரூரா சூழ் பேரூராழ்வாய் பெருமானே' என்கிறார். கோவை-கந்தசாமி முதலியார் இயற்றிய திருப்பேரூர்ப் போற்றிக் கலிவெண்பா, கிள்ளைவிடு தூது மும்மணிக் கோவை, பச்சைநாயகியார் ஊசல், மரகத வல்லியம்மன் மாலை, பச்சைநாயகியம்மை விருத்தம் என்ற நூல்களும் முத்துநைனாத்தை முதலியாரின் பச்சைநாயகியம்மை பிள்ளைத் தமிழ், ஆசிரியர் பெயர் தெரியாத பேரூர்ப் பட்டிப் புராணம் என்கிற பிறவாநெறிப் புராணம், குட்டிக் கவுண்டர் பாடிய அரசம்பல விருத்தம், இராமசாமிக் கவிராயரின் திருப்பேரூர் வண்ணம், மகாவித்துவான் வாசுதேவ முதலியார் இயற்றிய கண்ணாடி விடுதூது, விளக்குவிடுதூது, பச்சைநாயகி யம்மன் பந்தடி சிதம்பர தாண்டவராய முதலியாரின் மரகதமஞ்சரி, ஆசிரியர்கள் பெயர் தெரியாத பட்டீசுவரக் கோவை, பேரூர்மாலை, மரகதமாலை பச்சைநாயகி பேரில் வருகை, ஊஞ்சல் தென்பாங்கு, சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் (சம்பந்த'சரணாலயத் தம்பிரான்) அவர்கள் இயற்றிய திருப்பேரூர்பட்டி விநாயகர் ஆனந்தக் களிப்பு, பல வகைக் கண்ணிகள் மு. அருணாசலக் கவிராயர் பாடிய திருப்பேரூர் உலா, குடந்தை வித்துவான் சபாபதிப்பிள்ளை



இயற்றிய திருப்பேரூர்க்கட்டளைக் கலித்துறை யந்தாதி முதலிய பல நூல்கள் இப்பதியைப் பற்றிப் பாடப் பெற்றன. திருப்பேரூர்த்தலப் புராணத்தை திருவாவடுதுறை யாதீனத்துக் கச்சியப்ப முனிவர் பாடி யிருக்கின்றார். இது ஒப்பற்ற தமிழ்ப் பேரிலக்கியமாகவும், சைவ சாத்திர நூலாகவும் புலவர்களால் போற்றப் பெறுகிறது. 2,220 பாடல்களையும், 36 படலங்களையும் தன்னகத்தே கொண்டது.

தென்னாட்டிலேயே அற்புதக் கற்சிற்பங்களுடைய கோயில்களில் பேரூர் ஒன்று. சிற்பிகளுக்குள் ஒரு வழக்குண்டு, 'தாங்கள் செய்யும் சிற்பம், பேரூர், பெரியபாளையம், தாரமங்கலம், தாடிகொம்பு இவை தவிர மற்ற எல்லா வேலையும் செய்வதாக ஒப்பந்தம் செய்வார்களாம். பேரூரில் அழகிய சிற்பங்களைக் கனக சபையில் காணலாம். இதைக் கட்டியது மதுரை திருமலைநாயக்கர் சகோதரர் (மைத்துனர் என்றும் சொல்லப்படும்) அளகாத்திரி நாயக்கர். அவர் உருவம் ஒரு தூணில் காணப்படுகிறது. கனகசபைஉள்மண்டபத்தில் நாலு தூண்கள் மேலே பெரிய மண்டபத்தைத்தாங்கி நிற்கின்றன. ஒரு தூணில் ஒரு உருவம், அடி புலிக்கால், இடைமுதல் கழுத்துவரை பெண் பாகம், தலை யானைத்தலை தும்பிக்கையோடு கூடியதுஇருக்கிறது. பதஞ்சலி, வியாக்கிர பாதர் தில்லையில் கூத்தபிரானை வழிபட்டது போல் பிரமனும் திருமாலும் பட்டிமுனி, கோமுனிகளாக இங்கு வழிபட்டதாகக் கூறப்படுகிறது. அவர்களுடைய உருவச் சிலைகள் கனகசபையில் காணப்படுகின்றன. இன்றும் தூண்களில் இருக்கும் கஜசம்மாரமூர்த்தி, பிட்சாடனர், ஊர்த்துவ தாண்டவர், வீரபத்திரர், கணபதி, ஆறுமுகர், காளி இவர்களின் சிலைகள் மிகவும் அழகானவை, வீரபத்திரரின் விரிந்தசடைக் கற்றையில் தேள் செதுக்கப்பட்டிருக்கிறது. போர் வீரன் துப்பாக்கியுடனும், சித்தர்கையிலுள்ள பாம்பைக் குரங்கொன்று பற்றிக் கொண்டிருக்கும் உருவமும், வேடன் பெண்ணைத் தூக்கிச் செல்வதும், ஒரே உருவில் மீனும் பறவையும், இரணியவதம்அனுமான் சிங்கியைக்கிழித்தல் முதலிய உருவங்களும் காணப்படுகின்றன. ஒரே கல்லில் சங்கிலிகளும், சுற்றக்கூடிய வளையம் அமைந்த தாமரைமொட்டும் சிற்பியின்கைத்திறத்தின் சின்னங்களாக விளங்குகின்றன. இக்கனக சபையை யமைத்த சிற்பியின் மகன் ஒரு தூணில் தேரைஇருப்பதாகச் சொன்னானாம். அத்தூணிலிருந்தகுதிரை உருவத்தை உடைத்ததும் தேரை வெளிப்பட்டதாம். அக்குதிரையின் கால் குளம்பு, வால் இவைகள்தான் இப்போது காணப்படுகின்றன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த பாண்டியன் மாறன் சடையன் என்ற மன்னன் பேரூரில் திருமாலுக்கு ஒருகோயில் எடுத்தான் என்று செப்பேடு பின்வருமாறு கூறுகிறது;

''காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத்
திருமாலுக்குக் கமாந் துறையக்
குன்ற மன்னதோர் கோயிலாக்கியும்
ஆழிமுன்னீர் அகழாக
அகல்வானத் தகடுரிஞ்சும்
பாழி நீண்மதில் பரநந்தாங்கும்
பகலவனும் அகலவோடும்''

பேரூர் புராணத்தில் இப்பதியில் பள்ளுத் திருவிளையாடல் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இறைவனும் இறைவியும பள்ளனும் பள்ளத்தியாகவும் நாற்றுநட்டார்களாம். அதை இப்போது பெருந்திருவழாவாகக் கொண்டாடுகிறார்கள். நாற்று நடவு உற்சவம் என்று பெயர். ஆனி மாதம் நடக்கிறது. உழவுத் தொழிலார் உயிர்காக்கும் தொழிலைச் செய்யும் பள்ளர் (தேவேந்திர குலத்தினர்) இதை முன்னின்று நடத்துகிறார்கள். மார்கழித் திருவாதிரையிலும், பங்குனி உத்திரத்திலும் இத்தலத்தில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இக்கோயில் மிகவும் புராதனமானது. இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட உரோம நாணயங்கள் இங்கே அகப்பட்டன. கரிகாற் சோழன் கர்ப்பக் கிரகத்தைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. கொங்கு சோழர் காலத்தில் அர்த்த மண்டபம், மகாமண்டபம் இவைகள் கட்டப்பட்டன. ஒய்சள, விஜய நகர மன்னர்கள் பல தானங்கள் வழங்கியுள்ளனர். நாயக்க மன்னர் காலத்தேதான் கனகசபை கட்டப்பட்டது என்பதை மேலே சொன்னோம் நடராஜப் பெருமான் (ஆடவல்லான்) திருவுருவம் மிகச் சிறந்த சிற்ப அமைதி வாய்ந்தது. இத்தலத்திலுள்ள காளி கோயிலிலிருந்து பார்த்தால் சபாநாயகரின் தூக்கிய திருவடி காணப்படும். இதைத் திவ்விய தரிசனம் என்பார்கள்,

பட்டீசுவரர் கோயிலிலும் அழகிய சிற்றம்பலம் கோயிலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கொங்கு சோழர்களான விக்கிரம சோழன், கரிகாலசோழன், வீரசோழன் வீர ராஜேந்திர சோழன், ஒய்சள வீர வல்லாளன் கோமாறவர்மன் வீர பாண்டியன், கோனேரின்மை கொண்டான் முதலியவர் காலத்தவை அக்கல்லெழுத்துக்கள். அவைகளில் பெரும்பாலானவை நெல், நிலம் விளக்கு முதலியவைகள் தானம் செய்ததை அறிவிக்கின்றன, ஒரு கல்வெட்டில் தாமரைக் குளத்துக்காகத் தானம் வழங்கியதாக கூறப்படுகிறது. பங்குனி திருநாளில் திருப்பதிகம் (தேவாரம் பாடுவார்க்கு) நெல் அளித்ததை ஒரு கல்லெழுத்து தெரிவிக்கிறது. பட்டீசரின் பெயர் திருவாய்பட்டியுடையார் என்று குறிக்கப்படுகிறது.

# நம்நாட்டுச் சித்தர்கள்

**டாக்டர் இரா. மாணிக்கவாசகம்**

**தமிழ்ப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி சென்னை.**

"'செகமான செகமுழுது மாண்ட சோதி
திருவடிக்கே நமக்கரித்துத் திரும்பி னார்பின்
உககானந் தனையறிந்தும் அரனார் சொன்ன
உளவுகண்டார் புசுண்டரெனுங் காகந்தானே''
10-காவியம்

'காகமென்ற வேடமதாய் விருட்ச மீதிற்
காத்திருந்தார் வசிட்டரவர்க் கண்டார்
நாதர்
ஏகமதா எட்டான வசிட்டரே நீர்
எங்குவந்தீர்! வாரு மென்றே இடமு மீயத்
தாகமுடன் ஈசரும்மை யழைக்கச் சொன்னார்
சங்கதியைத் தங்களிடஞ் சாற்ற வந்தேன்
பாகமுடன் எட்டான விவரந் தன்னைப்
பத்துமெய்ஞ் ஞானபொரு வருபெற்
றோரே'

முதலிய பாடல்களில் இவர் காக வடிவு பற்றிய குறிப்புக்கள் காணப் பெறுகின்றன. இவர் பாடல்களை ஊன்றி ஆராயின் சிறப்பாக உப நிடதம், காவீபம் போன்ற பகுதிகள் குழூஉக் குறியீடாக இக் காக வடிவு குறிக்கப்படுகிறது என்று எண்ணத் தோன்றுகின்றது.

'நேத்திரத்தைக் காகம்போல் நிச்சய மாய்நிற்க
ஆத்துமத்தி வானந்தமாம்'

என்னும் பாடல் இவர் காகம்போல் பார்வை பெற்றிருந்தார் என்பதைத் தெளிவுறுத்துகின் றது.

'கோணாம லண்ணாக்கின் நேரே மைந்தா
குறிப்பறிந்து பார்த்தவர்க்கே முக்திதானே'

எனவரும் பாடல் இக் காகப் பார்வையின் தன் மையை விளக்கும்.

மற்ற சித்தர்கள்போலவே யோக மார்க் கம் பற்றிய கருத்துக்களைக் குழூஉக் குறிய யமைத்துப் பாடிய பாடல்கள் நிறைந்துள் ளன.

## 11. குதம்பைச் சித்தர்

'ஆதாரமான அடிமுடி கண்டோர்க்கு
வாதாட்ட மேதுக்கடி-குதம்பாய்
வாதாட்ட மேதுக்கடி'
செத்தாரைப் போலத் திரியுமெய்ஞ் ஞானிக்குக்
கைத்தாள மேதுக்கடி-குதம்பாய்
கைத்தாளமேதுக்கடி'

'மாங்காய்ப்பா லுண்டு மலைமே
லிருப்போர்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி-குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி'

இங்ஙனம் சித்தர் ஞானக்கோவையில் சுமார் 32 பாடல்கள் இவர் பெயரில் காணப்படுகின்றன. வேறு நூற்கள் இயற்றியதாக எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. குதம்பை என்னும் காதணியை அணிந்த பெண்ணுக்கு ஆகிவரும் ஆகு பெயராக அமைகிறது. தம் பாடல்களில் இக் குதம்பையை விளித்துப் பாடியிருப்பதால் இப்பெயர் பெற்றார் என்பது பரவலாக இருந்துவரும் கருத்து.

அகத்தி மூலிகையால் அகத்தியரும், அழு கணியால் அழுகணிச் சித்தரும் பெயர்பெற்றார் போல குதம்பை அல்லது மூக்கொற்றிப்பூடு என்ற மூலிகையால் இவர் பெயர் பெற்றிருத் தல் கூடும்.

## 12. கொங்கணர்

இவர் போகர் மாணவர் என்பவர். இவர் பளிக்கிச் சாதியார். இவர் வீரட்டாசமூர்த்தி யின் சிரத்தில் தமது குளிகையை வைக்க அச் சிவலிங்க மூர்த்தம் அக் குளிகையை நீறாக்காது மறைத்ததால் அச் சிவமூர்த்தியைப் பூசித்துக் குளிகை பெற்றவர். இவர் போகர் விரும்பிய பெண் அகப்படாது வருந்திப் பிரதிமையைப் லபண்ணாக்கி ஆசிரியரிடம் கொண்டு சென்ற னர். இவர் திருமழிசை ஆழ்வாரிடம் சென்று ரஸக்குளிகையொன்று கொடுத்து, இது காணீ கோடியைப் பேதிப்பது என்று கூற, ஆழ்வார் தம் தேகத்து அழுக்கை உருட்டி இது காணி கோடியாக்கும் என்று கொடுத்தனர். சித்திரி தனைப் பரிட்சித்தறிந்து களிப்புற்று ஆழ்வா ரிடம் நட்பு கொண்டனர்.

இவர் கோயம்புத்தூருக்கு அருகில் இருந்த தாகக் கூறுவர். இவர் காலம் திருவள்ளுவர் காலமாக இருக்கலாம். இவர் தவத்திலிருக்கை யில் கொக்கொன்று இவர் மீது எச்சமிட அதை அவர் பார்க்க அது எரிந்து சாம்பலாயிற்று. கொங்கணர் தவம் விட்டு நீங்கித் திருவள்ளுவர் இருக்குமிடத்திற்குப் பிட்சைக்கு வந்தனர். திருவள்ளுவர் தமது தேவியாருக்குக் கட்டளை யிட அவள் வருவதற்கு முன் சித்தர் கோவித்து நோக்க அந்தக் கற்புடையாள் 'கொக்கென் றெண்ணினையோ கொங்கணவா' என, சித்தர் இவள் மகாபதிவிரதை என வெட்கிச் சென்ற னர். இவர் சில வைத்திய நூல்கள் எழுதியிருக் கின்றார். அவை கொங்கணர் கடைக் காண்டம் ஞானம் 100, குளிகை, திரிகாண்டம் முதலியன. இக்கருத்துக்கள் அபிமான சிந்தாமணியில் காணப்படுகின்றன. இவரது பாடல்களில் அகத் தியரைக் குருவாகக் குறித்துப் பாடுவதால், இவர் சித்தர் அகத்தியர் காலத்தவர் என்பது உறுதி.

இவர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆதலின் இப்பெயர் பெற்றிருக்கக் கூடும்.

**—(தொடரும்)**

# உள்ளத்தில் உண்மையொளி

டாக்டர் **த. அமிர்தலிங்கம்**

1

''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்''

என்றார் அமரகவி பாரதியார்.

வாக்கிலேமட்டுமன்று, நம் வாழ்விலேயும் ஒளி உண்டாக வேண்டுமானால் நாம் நம் உள்ளங்களிலே உண்மை ஒளியை முதலில் ஏற்றி வைத்துக் கொண்டாக வேண்டும்.

விளக்கின் ஒளி இல்லாத வீடு இருண்ட வீடு. அதைப்போல் உண்மையொளி இல்லாத உள்ளமும் இருண்ட உள்ளம் ஆகும். இருண்ட வீட்டிலே எப்படி வாழ முடியாதோ, அப்படி இருள் சேர்ந்த உள்ளம் கொண்டும் நாம் மேன்மை காண முடியாது.

நாம் மேன்மை அடைய வேண்டுமென்றால் முதலில் நம் உள்ளங்களில் உண்மை ஒளியை ஏற்றி வைத்துக் கொண்டாக வேண்டும்.

விஞ்ஞானிகள் காலம் காலமாக முயன்று கண்ட விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளை எல்லாம், நாம் நம் வாழ்க்கை வளமாவதற்காக விரும்பி ஏற்றுக் கொண்டு விட்டோம். ஆனால் மெய்ஞ்ஞானிகள் ஆயிரம் ஆயிரமாயிரம்ஆண்டுகளாக அரிதின் முயன்று சொல்லிச் சென்ற அருள்மொழிகளை-அறிவு மணிகளை நாம் நம் வாழ்க்கை நலமாவதற்காக விரும்பி நாம் ஏற்று அதை நாம் போற்றிக் கொண்டிருக்கிறோமா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

ஒரு தந்தை தம் மக்களுக்கு ஆகுமே என்று வீடு வாங்கித் தருகின்றார். தொலைக்காட்சிப் பெட்டி வாங்கித் தருகிறார். தொலைபேசி கருவி வாங்கித் தருகிறார். தன்னால் இயன்ற அளவுக்குக் காரோ, ஸ்கூட்டரோ, சைக்கிளோ எது தனக்கு இயலுமோ அந்த வாகனமும் வாங்கித் தருகிறார். அவற்றையெல்லாம் மக்களும் தந்தை வைத்துவிட்டுச் சென்ற செல்வமாக சொத்தாகப் போற்றி ஏற்றுக் கொள்கிறார்கள்.

பெற்றோர் சேர்த்து வைத்துச் சென்ற செல்வம் யாவும் அவர் தம் மக்களுக்கு பரம்பரைச் சொத்தாக அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வந்து இயல்பாக சேர்ந்துவிடுகிறது. ஆனால் வாழ்க்கை வளமாவதற்குத் தான் அந்தப் பொருட்செல்வங்கள் துணையாகுமே தவிர, ஒருவர் வாழ்வு புகழும் பொலிவும் பெற வேண்டுமானால் முன்னோர்வைத்து சென்ற அந்தப் பொருட் செல்வங்களோடு ஆன்றோர் ஏற்றி வைத்துச் சென்ற ஜோதி விளக்குகளாம் கருத்துச் செல்வங்களும் கச்சிதமாக இணைய வேண்டும், நாம் இணைத்துக் கொண்டாக வேண்டும். அப்பொழுது தான் உள்ளத்திலும் ஒளியுண்டாகி, வாக்கிலும் வாழ்விலும் ஒளி உண்டாக முடியும்.

நம் இந்தியத் திருநாட்டைப் பொறுத்த வரை ஆன்றோர்கள்-அருட்பெரியார்கள் ஏற்றி வைத்துச் சென்றுள்ள ஜோதி ஒளிவிளக்குகளுக்குப் பஞ்சமே இல்லை. ஆனால் நாம்தான் இதுகாறும் அவற்றைப் பொருட்படுத்த முயன்றோம் இல்லை.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று சொல்லிச் சென்ற திருமூலர் அருளுரையை நாம் என்றாவது எண்ணிப் பார்த்திருக்கிறோமா?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இறைவன் ஒருவனே என்ற வகையில் திருவள்ளுவப் பெருமகனார் பெயரையும் சுட்டாது இறைவன் திருவடிகளை மட்டுமே போற்றிப் புகழ்ந்துள்ள திருக்குறளை நாம் எண்ணிப் பார்க்கிறோமா!

**சென்னைத் தொலைக் காட்சியில் நமது சிந்தனையாக ஆகஸ்ட் 18, 19, 20, 21 தேதிகளில் வழங்கப்பட்ட இக்கருத்தாரம் திருக்கோயில் இதழ் வாசகர்கள் படித்து மகிழக் கட்டுரையாக வழங்கப்பட்டுள்ளது; படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.**

இடைக்காலத்திலே வாழ்ந்த பல மகான்கள் 'ஒன்றென்றிரு தெய்வம்' என்று சொல்லிச் சென்ற அந்த அருளுரையாவது நாம் நினைந்து பார்ப்பது உண்டா!

விஞ்ஞானி கண்டுபிடித்த கருவிகளை எல்லாம் தள்ளுவதே இல்லை; ஆனால் மெய்ஞ்ஞானி கண்டுபிடித்து உரைத்த கருத்துரையை நாம் நெஞ்சில் கொள்ளுவதே இல்லை! அப்படியானால் எப்படி நாம் மேன்மைகாண முடியும்! போனது போகட்டும், இனிமேல் நல்லதே ஆகட்டும்.

'யாரும் பணிந்திடும் தெய்வம்-பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று-இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்''

பாரதி சொன்ன அருளுரை நன்று.
பதித்துக் கொள்வோம் நம்நெஞ்சில் இன்று.

## 2

இறைவன் ஒருவனே என்பதை நாம் உளமார ஏற்றுக் கொண்டுவிட்டோம். இனி நம்மிடத்தில் மதச் சண்டை உண்டாக முடியாது.


மதமெனும் பேய்பிடியாதிருக்க வரம்பெற்று விட்டவர்கள் நாம்.

'புறத்தொரு மதத்தினோரைப்புண்படப் பேசிடாமல்
சேவைகள் செய்வோம்-தெய்வத்தைக் காண்போம்''

ஒன்று பரம்பொருள் என்பது தெளிவான பிறகு, அந்தப் பரம்பொருள் படைத்த மக்களாகிய நாமும் சகோதரர்களாகத் தானே இருக்க முடியும்! சொந்தச் சகோதரர்கள் எங்கேனும் மொழி, இன மாறுபாடு குறித்து சண்டை போட்டுக் கொள்வது உண்டா? அது நன்றா?

'சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்-தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.''

மகாகவி பாரதியார் சொன்ன இவ்வாக்கு மன்றோ கீதை, இது காட்டுகிறது அல்லவா நமக்கு நல்ல பாதை. இராமாயண தசரதருக்கு மக்கள் எத்தனைபேர்? என்று கேட்டால் நால்வர் என்று பலரும் சொல்வீர்கள்! அது தவறு. இராமர், பரதர், இலக்குவனர், சத்ருக்கனர் இந்த நால்வரும் தானே தசரதர் ஈன்ற மக்கள் என்று கூறுவீர்கள்; ஆனால் விடை தவறு. அயோத்தியை விட்டு ஆரண்யம் வருகிறார் இராமர்: கங்கைக்



கரையிலே வாழ்ந்திருக்கும் ஒரு வேடன் ஆகிய குகன், இராமபிரானுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மேலிட வந்து காணுகின்றான். ''நீ தொண்டன் அல்ல, என் தோழன், தோழனுமல்ல என் தம்பி'' என்று கூறித் தோளுடன் தோள், குகனைச் சேர்த்துக் கொள்கிறார் இராமபிரான்.

அதே இராமபிரான் கிட்கிந்தைக்கு வருகிறபோது குரக்கினத்துத் தோன்றிய சுக்ரீவன் வந்து அபயம் வேண்டுகிறான், 'நீயும் என் தம்பியே' என்பதாகப் பேதமின்றிஅரவணைத்துக் கொள்கிறார் அயோத்தி அண்ணல்.

வேடுவரை, குரக்கினத்துத் தோன்றிய சுக்ரீவரை தம் தம்பிமாராக ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, அரக்கர் இனத்தில் தோன்றிய வீடணன் வந்து அடைக்கலம் கோரும்போதும் தம் ஒரு உடன் பிறப்பாகவே அரவணைத்துக் கொள்கிறார் இராமபிரான்.

''குகனோடும் ஐவரானோம் முன்பு;
பின்பு குன்று சூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனோம்; எம்முழை
அன்பில் வந்த
அகனமர் காதல் ஐயா
நின்னொடும் எழுவர் ஆனோம்
புகலரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை'

என்று தசரதருக்கு மக்கள் நால்வர் அல்ல, எழுவர் என்பதாக இராமரே தெளிவு செய்வதாக கம்பரின் பாடலில் காண்கிறோம்.

ஆகவே இராமரைப் போற்றுகிற நாம், இந்தியத் திருநாட்டிலே வாழ்கிற நாம், நமக்கு எத்தனை சகோதரர்கள், சகோதரிகள் என்று கேட்டால் நம் வீட்டிலே இருக்கிறவர்களை மாத்திரம் எண்ணிக் கூறுதல் சரியாகாது. நாட்டில் உள்ளவர்களையும் சேர்த்து எண்பது கோடி சகோதர-சகோதரிகள் நமக்கு இருப்பதாகக் கூற வேண்டும். இப்படி எண்ணிக் கூறுவது ஒன்றும் புதுமையானதும் அல்ல, அன்றே மகாகவிபாரதியார் 'முப்பது கோடி முகமுடையாள்' என்று சொன்னார். இன்று எண்பது கோடியாக நாம் வளர்ந்திருக்கிறோம். இந்த 80 கோடி பேரும்

" நிகரென்று கொட்டு முரசே—இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

தகரென்று கொட்டு முரசே—பொய்ம்மைச்
சாதி வகுப்பினை எல்லாம்'

## 3

'முப்பது கோடி வாய் நின்னிசை முழங்கவும்
அறுபதுகோடி தோள் உயர்ந்துனக் காற்றவும்
'திறனிலாள்' என்றுனை யாவனே செப்புவன்!
அருந்திறலுடையாய் அன்னையே போற்றி''

என்று பாரதத்தாயின்புகழ்பாட முப்பதுகோடி வாய்கள் இருப்பதாக அன்றுபாடினார் மகாகவி பாரதியார். இன்று எண்பது கோடி வாய்கள் பாரதத்தாயின் இனிய புகழ் பாட இருக்கின் கின்றன. பாரதத்தாயின் அடிமலர் போற்றி அவளை அவனியில் உயர்த்த 160 கோடி திண்திறல் தோள்களையும் நாம் பெற்று விளங்குகின்றோம்.

அறுபது கோடி தோள்கள் இருந்த நாளிலேயே பாரதத் தாயைத் திறனிலாள் என்று யாரும் துணிந்து கூற முடியுமா! என்று வினவினார் மகாகவிபாரதியார் என்றால்இன்றைக்கு 160கோடிதிண்திறல் தோள்களைநாம்கொண்டு விளங்கும்போது நம் பாரதத் தாயின்ஆற்றலும் அரும்புகழும் மேன்மேலும் சிறப்புற்றோங்கும் என்பதிலே யாருக்கும் எவ்வித ஐயமும் வேண்டாம்.

'பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரதநாடு'

'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—
மிடிப்
பயம் கொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்'.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால் அந்த நாட்டு மக்கள் தம்முடைய தோளாற்றல் கொண்டு தளர்விலாது உழைப்பவர்களாக இருத்தல் வேண்டும். உழைப்பு உழைப்பு உழைப்பு...அதுதான் நாட்டையும் வீட்டையும் உயர்த்தும் தாரகமந்திரம்.

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா வீசிய அணுகுண்டால்ஹிரோசிமா, நாகசாகி எனும் இருநகரங்களும் தரைமட்டமாகிப் பல லட்சக்கணக்கான மக்கள் மடிந்தார்கள். பல லட்சக்கணக்கான மக்கள் நோய்களில் நொடிந்தார்கள் ஜப்பான் நாட்டிலே. ஆனால் ஊக்கம் குன்றிப் போய்விடவில்லை ஜப்பான் நாட்டினர். அவர்களுடைய ஆற்றல் மிக்க சலிப்பிலா உழைப்பால் உலகின் தொழில் வளர்ச்சி மிக்க நாடுகளில் முந்தும் ஒன்றாக ஜப்பான் நாடு முதன்மைபெற்று விளங்குவதை இன்று காணுகின்றோம்.

ஒருநாடு, நாடாக இருந்தாலும், பாலைவனமாகவே இருந்தாலும் ஆற்றலை மிக்க மக்களைக் கொண்டு விளங்குமானால் அந்நாடு தலைமை பெற்று வளமை மிக்க நாடாகும் என்பதை நம் அருந்தமிழ் மூதாட்டி ஔவையாரும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இனிய தமிழ் மொழியில் பாடி வைத்துச் சென்றிருக்கக் காண்கிறோம்.

''நாடா கொன்றோ காடாகொன்றோ
அவலா கொன்றோ மிசையாகொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி
நல்லை வாழிய நிலனே''

என்பது ஔவையார் பாடியுள்ளபுறநானூற்றுப் பாடல் ஆகும்.

நம்முடைய பாரதத் திருநாடும் ஒரு காலத்தில் செல்வ வளத்தில் சிறப்புற்று விளங்கிய நாடுதான். இன்றைக்கு ஜப்பான் நாட்டிலும், அமெரிக்க நாட்டிலும் வீடுகள்தோறும் கார்கள் நிற்பதையும் அங்கு சாதாரண கூலிப்பணி செய்பவர்கள்கூட கார்களில் வந்து பணிமுடித்துச் செல்வதையும் வியப்பாக அந்நாடுகளுக்குச் சென்று வந்தோர் கூறுவதைக்காண்கின்றோம்.

அத்தகைய மிதமிஞ்சிய செல்வ வளமை பெற்று நாமும் ஒரு காலத்தில் திகழ்ந்திருக்கிறோம். நெல்மணிகளைக் கவர்ந்துண்ணும் கோழிகளை விரட்ட, மகளிர் தாம் கால்களில் அணிந்திருந்த பொற்கொலுசுகளை எடுத்து வீசுவார்களாம். பிறகு அப்பொற் கொலுசுகளை எடுத்து மீளவும் அணிய மாட்டார்களாம். நமது இலக்கியங்களிலே நம்நாட்டின் இத்தகைய வளமைமிக்க மாட்சிகளை கவிதையாகத் தீட்டியுள்ளனர் புலவர் பெருமக்கள்.

'நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை

பொற்காற் புதல்வர் புரவியின்றிஉருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்'

என்கிறது பட்டினப்பாலை.

கம்பர் தம்கவிதை ஒன்றிலே சொல்வார்; பெறக்கூடிய இரவலர் இல்லாத காரணத்தாலே தரக்கூடிய புரவலர் இல்லை.

'வண்மைஇல்லை ஓர்
வறுமை இன்மையால்''

அத்தகைய வளமை நாம்பெற உழைப்போம் உழைப்போம் அயர்விலாது உழைத்திடுவோம்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!'

## 4

'செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே'

செல்வம் ஓரிடத்திலே தேங்குவது கூடாது. நம் உடலில் இரத்தம் ஓரிடத்தில் தேங்கினால் என்னவாகும்! இரத்த ஓட்டம் பெறாத உறுப்புகள் செயலிழந்து பக்கவாதம் உண்டாகி விடும். எப்படி இரத்த ஓட்டம் உடலின் எல்லா பாகங்களுக்கும் சீராக இருக்க வேண்டுமோ, அப்படி செல்வத்தின் ஓட்டமும் சமுதாயத்தில் சீராக இருந்தால்தான் நாடு மேன்மை காணும்,

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்பது திருக்குறள்.

ஒருவன் தான் ஈட்டிய அளவிலாத செல்வத்தைத் தான் ஒருவன் மட்டுமே தனித்துண்ண முற்படுவானே ஆனால், அவனுடைய செயல்,மனம் படைத்த உயர் மனிதன் செயல் ஆகாது. அறிவிலாத அற்பப் பிராணிகளின் செயலுக்கு அது ஒப்பாகும் என்று பகுத்துண்ணும் பண்பில்லாதவன் செயலைப் பழித்துக் கூறுகின்றன நமது நீதி நூல்கள்.

'துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்''

என்று நாட்டின் செல்வத்தை-வீட்டின் செல்வத்தை பலரோடும்பகிர்ந்துதான்உண்ணவேண்டும் என்று வற்புறுத்துகின்றது நாலடியார் என்ற பழந்தமிழ் நூல்.

எண்பது கோடி மக்கள் வாழும் இந்தியத் திருநாட்டில் பகிர்ந்துண்டுவாழும்அறமே தலையான அறம் ஆகும். அதுவே நமது தேசத்தின் ஒருமைப்பாட்டினை நிலை நிறுத்தும்-வெற்றி பெறச் செய்யும் ஒப்பற்ற மார்க்கமும் ஆகும்.

அதனால்தான் மகாகவி பாரதியார் 1921 ஆம் ஆண்டிலேயே அமரராகிப் போனாலும், பாரத நாட்டின் ஆனந்த சுதந்திரத்தை அகத்திலே கண்டு மகிழ்ந்ததோடு, சுதந்திர பாரதத்தில் வாழும் மக்கள் எப்படியெல்லாம் ஒருமைப்பாட்டுணர்வோடு நாட்டின் வளங்களைச் சமச்சீராகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை தொலை நோக்குணர்வோடு பாடி வைத்துச் சென்றிருக்கிறார்.

'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரிவெற்றிலைக்கு மாறுகொள்வோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்'

'சிங்களத் தீவினுக்கோர் பாலம்அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்'

உறவுப் பாலம் எப்படி உறுதியாக இருக்க வேண்டும் என்பதற்கு உலக மகா கவிஞர் கண்டு சொன்ன ஒப்பற்ற வழி இது; இந்திய ஒருமைப்பாடு நிலை பெறுவதற்கும், உலக ஒருமைப்பாடு அதன் வழி உண்டாவதற்கும் அமரகவி பாரதியார் ஆய்ந்துணர்ந்து சொன்ன ஒரே வழி இது.

நம் உள்ளத்தில் உண்மையொளி உண்டாகிவிட்டது. அந்த உண்மையொளியில் நாம் வாழும் வழியும்-வளரும் வழியும்-சிறப்புறும் வழியும் தெளிவாகிவிட்டது.

'இந்தியனாக இருப்பதில் பெருமைப்படு' என்று நம் முன்னோர்கள் சொல்லிய சொல்லின் பொருள் இப்போதுதான் புரிகிறது: இனிக்கிறது.

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே-அவர்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே-அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே-இதை
வந்தனை கூறி மனதில் இருத்தி என்
வாயுற வாழத்தேனோ--இதை
வந்தேமாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ.

# உமைபங்கர் திருவடிவின் அமைப்பும் விளக்கமும்

டாக்டர் அரு. மருததுரை

தமிழியல் துறை பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

## முன்னுரை:

பல்வேறு திருக்கோலங்களில் அடியவர்களால் சிவபெருமான் வழிபடப் பெறுகிறார். தமிழக மரபு வழியாகப் பேணப்பெறும் தத்துவங்களும் வடிவ அமைப்பினை நன்கு புலப்படுத்துகின்றன. மூவர் முதலிகளினாலும் ஏனையோராலும் சிந்தையில் வைத்தெண்ணப் பெற்ற சிவத்திருக்கோலம் உமைபங்கர். சிவபெருமானை வணங்கிய அடியவர்களும் அவனை வழுத்திப் பாடிய சமயக் குரவர்களும் ஆன்றோர்களும் உமைபங்கன் திருவடிவைப் பலவாறாக வருணனை செய்து மகிழ்ந்தனர். அவ்வடிவின் அமைப்பினையும் விளக்கத்தையும் இக்கட்டுரை விளக்குகிறது.

## பழந்தமிழ் நூல்களில் உமைபங்கர்

இயற்கைக்குகந்த உலகியல் வாழ்க்கைக்கேற்ற வழிபாடாக இவ்வடிவினை அறிஞர் கருதுவர். இறைவனை அம்மையப்பனாகக் கருதும் பெற்றியை நம் பழந்தமிழ் இலக்கியங்களும் கொண்டிருந்தமையை,

'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்'
(ஐங்குறு நூறு)

''பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்''
(புறம்)

''சேர்ந்தோள் உமையே'' (அகம்)

''உமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
செல்வன்'' (முருகு)

''உமையொரு பாகத்தொருவன்'' (சிலம்பு)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

ஆண் பெண் வேறுபாடின்றி இருபாலர்க்கும் ஒத்த உரிமையையும் மேன்மையினையும் வழங்கும் வடிவமாகப் போற்றப்படுவது இவ்வடிவம். 'ஆதிபகவன்' என்று திருவள்ளுவர் குறிப்பிட்டமையினை அனாதி முத்த சித்துருவாகிய முதல்வன், ஒன்றினும் தோய்வின்றித் தானே சுயம் பிரகாசமாய் நிற்கும் தன்னுண்மையாற் சிவம் எனவும் உலகெலாமாகி வேறாய் உடனுமாய் இவ்வாறு உயிர்களின் வழி நிற்கும் தன்மையாற் சக்தி எனவும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு உலகினை இயக்கி நிற்றல் பற்றி இறைவனை ஆதிபகவன் என்ற பெயரால் திருவள்ளுவர் குறித்துள்ளார் எனல் பொருந்தும்' என்பர் க. வெள்ளைவாரணனார் (பன்னிருதிருமுறை வரலாறு).

இறைவன் ஆணுக்கும் பெண்ணுக்குமான பொது தெய்வமாக இரண்டும் இயைந்த வடிவில் நுண்மாண் நுழைபுலமிக்க நம் தமிழர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பிருந்தே போற்றி வந்துள்ளனர். சிவபெருமானைத் தாயாகவும் தந்தையாகவும் போற்றி அடியவர்கள் தொடர்ந்து உமைபங்க வடிவினை வழிபட்டு வருகின்றனர்.

## மூவர் வாக்கில் உமைபங்கன்

அர்த்தநாரீஸ்வரர் என்று வடமொழியில் விளிக்கப்படும் உமைபங்கன் வடிவினை ஞான சம்பந்தர் ஒரு பெண்மையுடையவன் (1.1.5) மாதிலங்கு திருமேனியர் (1.2.2.) தேவியோர் கூறினர் (1,8.4.) உமை உடனுறைபதி (1.19.8) பெண்ணோர் பாகமுடையார் (1.28.8) மங்கையோர் பாகன் (1.39,6) உமையாள் பங்கன் (1.64.4) என்று நூற்றுக்கணக்கான பாடல்களில் பாடிப் பரவியுள்ளார்.

நாவுக்கரசர் நாரிபாகன் வடிவினை, உமைபாகர் (4.10.9) அரிவையோர்பாகர் (4.25.6) 'நேரிழை கூற்றினார் (5.44.7) அணங்குபாகத்தன் (5.38.7) என்றவாறு பலவாகக் கூறியுள்ளார்.

சுந்தரர், மங்கைபங்கர் (7.1.9) உமையோர் கூறன் (7.64.9) மடந்தைபாகன் (7.57.4) மாதிடங் கொண்டவன் (7.27.3) என்று பலவாறாக இமைப்பாவை கூறாடு திருவுருவினைப் பாடி மகிழ்ந்துள்ளார்.



**ஆகமங்கள் குறிப்பிடும் உமைபங்கன் வடிவம்:**

உமைபங்கன் வடிவத்தை ஆகமங்கள் அர்த்தநாரீசுவரமூர்த்தி என்றழைக்கின்றன, அம்சுமத்பேதாகமம், காமிகாமம், சுப்ரபேதாகமம், காரணாகமம் முதலான ஆகமங்களிலும் சில்பரத்னம், காசிய சில்ப சாஸ்திரம், ஸ்ரீ ஸ்ரீதத்துவநிதி சாரஸ்வதிய சித்ரகர்ம சாஸ்திரம் முதலிய சிற்ப நூல்களிலும் இவ்வடிவம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

வலதுபுறம் ஆண்வடிவமும், இடதுபுறம் பெண் வடிவமும் அமைந்திருக்கும். ஆண் பகுதியில் சடாமகுடமும் பிறைச்சந்திரனும் மகர குண்டலமும் நாக குண்டலமும் நெற்றிக் கண் பாதியாகவும் இருக்கும். இரண்டு அல்லது நான்கு கரங்கள் இருக்கும். நான்கு கரங்களாயின் காத்தற் குறிப்பும் மழுவும் அருட் குறிப்பும் இடக்கரத்தில் கபாலமும் பொருந்தியிருக்கும். இடுப்பிற்குக் கீழே புலித்தோலாடையும் மார்பில் நூலும் பாம்பும் மேகலாபரணமும் அணியப் பெற்றிருக்கும். உடல் முழுவதும் நீறு பூசியும் வலதுகால் சற்றே வளைந்து தாமரையின் மேல் இருக்கும். இறைவனின் நிறம் சிவப்பு (T.A. Gopinath Rao, Elements of Hindu Iconograph), vol. II)

இடதுபுறமுள்ள பெண் (உமை) வடிவத்தில் மகுடமும், நெற்றியில் திலகமும் மைதீட்டிய கண்ணும் காதில் குண்டலமும், நான்கு கரங்களாயின் இடதுபுறம் ஒன்று கடிகக் குறிப்புடனும், மற்றொன்று எருதின் தலை மீதும் பொருந்தியிருக்கும். மூன்று கரங்களாயின் இடதுபுறம் ஒரு கரம் மட்டுமே இருக்கும்; அதில் மலர் அல்லது கண்ணாடி அல்லது கிளி இருக்கும்; இரண்டு கரங்களாயின் ஒன்றில் மேற்கண்ட பொருள்களில் ஏதாவது ஒன்றும் மற்றொரு கரம் கீழே தொங்கியவாறும் இருக்கும். மார்பகத்தே ஆபரணங்களும் வைர அணிகலன்களும் அணியப் பெற்றிருக்கும். இடுப்பிலிருந்து கீழ்வரை அழகிய வண்ணப் பட்டாடை இருக்கும். காலில் மருதாணி பூசப் பெற்றிருக்கும். அம்மையின் வண்ணம் கிளிப்பச்சை அல்லது அடர்ந்த பச்சை. முகம் அமைதி தவழும்படியாக அமையப் பெற்றிருக்கும் என்றவாறு உமைபங்கன் வடிவினை ஆகமங்கள் விளக்குகின்றன.

''மூன்றெனப் படுதனி மூர்த்தி யம்பிகை
யேன்றுறத் திருவுளத் தெண்ண லானிலந்
தோன்றிய வுயர்த்தொகை தொடுத்த காமத்தி
லூன்றிய விருப்பினா லொருத்தி
வேண்டினன்''

என்ற உபதேச காண்டம். மூர்த்தி விசேடச் சருக்கம் (பா. 8) பாடலும்,

''உமையுந் தானும் வேறன்மை யுருவினி
டத்துந் தெளிப்பான்போ
லிமய மயிலை யொருபாதி வடிவி னிறுவி
நாற்கரத்து
மமைய வனசந் திரிசூலம் அபயவரத
மிவை தாங்கி
நமையு முய்யக் கொண்டருளு நாரிபாகன்
திருவுருவம்''

என்ற காஞ்சிப் புராணம், சிவபுண்ணியப் படலத் (பா. 19) தில் உள்ள பாடலும் உமை பங்கன் வடிவினைப் பாங்குற விளக்குகின்றன.

## தேவாரம் காட்டும் உமைபங்கர் வடிவம் :

மூவர் முதலிகள் மிகுதியாக உமைபங்கன் வடிவினைப் போற்றி வணங்கினர். உயிர்களுக்குத் தாயாய் தந்தையாய் ஆன சிவ பெருமானை ஞானசம்பந்தர், 'தோடுடைய செவியன்' என்று முதல் திருப்பாட்டிலேயே உமைபங்கன் வடிவினைக் கண்டு பதிகத்தைத் தொடங்கியுள்ள திறம் சிந்தனைக்குரியது.

''புதுவிரி சொன்ப யோலை ஒருகாதொர் காது
சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேதகீத மொருபாடுமோத
மொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றைதுன்று சடைபாகர் மாதர்
குழல்பாகமாக வருவர்
இதுவிவர் வண்ணவண்ண மிவர்வண்ணவண்ண
மெழில்வண்ணவண்ண மியல்பே'' *(4.8.10)*

என்ற நாவுக்கரசரின் நற்றமிழ்ப்பாடல் நாரி பாகன் வடிவினை நமக்குக் காட்டுகிறது.

''குளிரும் மதிசூடிக் கொன்றைச் சடைதாழ
மிளிரும் அரவோடு வெண்ணூல் திகழ்மார்பில்
தளிரும் திருமேனித் தையல் பாகமாய்''
*(1.85.4)*

என்று ஞானசம்பந்தரும்,

''கோசிக மும்அரையிற் கோவண மும்மதளும்
மற்றிகழ் திண்புயமு மார்பிடை நீறுதுதை
மாமலை மங்கையுமை சேர்சுவடும் *(7.84.4)*

என்று சுந்தரரும் உமைபங்கன் வடிவினை விளக்கியுள்ளனர். தேவாரப் பாடல்களில் பரவலாகக் காணலாகும் உமைபங்கன் வடிவக் குறிப்புகளைத் தொகுத்து நோக்குவமாயின் அவ்வடிவு சிவபெருமான் செய்ய திருமேனிய னாகவும் மார்பில் வெண்ணீற்றைப் பூசியவ னாகவும் சடையின்மேல் திங்களையும் கங்கை யையும் கொன்றையையும், கூவிளம், மத்தம் ஆகியவற்றைச் சூடிய சடை முடியையுடையவ னாகவும் அரவொடு வெண்ணூல் புரளும் மார்பினனாகவும் புலித்தோலாடையணிந்து மான் ஒரு கரத்திலும் மழு ஒரு கரத்தில் தாங்கியவனாகவும் அமைகிறது. உமையவ ளின் குழல், இடை, மார்பு முதலியவை பல் வேறு அடைகளுடன் வருணனை செய்யப்பட் டுள்ளன. சிவனின் நிறம் சிவப்பு, தேவியின் நிறம் பசுமை, கடல் வண்ணம், மரகதம் என்று மூவரும் குறித்துள்ளனர்.

## வடிவ விளக்கம் ;

உமைபங்கன் வடிவம் பற்றிய தேவாரக் குறிப்புகள் அவ்வடிவம் பற்றி நம் சிந்தையைத் தூண்டி அரிய விருந்தாகின்றன. பாகம், பங்கு கூறு என்னும் சொற்களும் ஒரு பாகம், ஒரு கூறுபட்ட, ஒரு பங்கு என்பதும் பெருக வழங்கு வதாகும். 'அரிவைதன் உருவினன்' *(1.125.1)* என்பதால் பெண் வடிவே தன் வடிவாக என்ற பொருளும் கிடைக்கிறது.

'பிரியாவகை' *(1.9.1)* என்பதால் பிரிந்து போகும் அளவில் தனித்தனியே இருந்த கால மும் கோலமும் உண்டு. அவற்றில் வேறாவது இது என்பதாகிறது.

'ஆயிழையோடு வேறும் உடனுமாய்' *(1.86.2)* என்பதிலிருந்து ஒன்றாகாது இரண் டாகவும் ஒன்றும் இரண்டுமாகவும் உள்ள வடிவம் என்ற நுட்பமான சாத்திரக் குறிப்பும் கிடைக்கிறது.

'மகிழ்ந்தான்' *(1.80.7)*, 'அமர்ந்தருளி' *(1.108.1)* 'உகந்தான்' *(2.157.2)* என்று சொல்வதால் இங்ஙனம் இத்திருவடிவு கொள்வ தால் இச்சாமாத்திரமான சங்கற்ப விஷேச மான (உயிர்களுக்கு) உற்பவம் அருளித் தோற் றத்தை உயிர்களுக்குச் செய்தலையும் குறிப் பிடுகிறது.

'உமையாளை ஒரு பாகம் அடையாளம் அது கொண்டீர்' *(3.271.1)* என்பதால் இது ஓர் அடையாள மாத்திரமே அன்றி இதுவே இறைவடிவன்று. சுத்த சத்துவ நிர்க்குண ஞான வடிவானவன் இறைவன் என்றும் சொல் கிறது.

'உமை ஓர் பாகம் அடக்கின' *(2.166.10)* என்பதால் பெண்உரு ஒருதிறன் ஆகின்று அவ்வுரு தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக் கும்' (புறம் *1.7.8)* என்று புறநானூறு கூறும் அடக்கிக் கரத்தல் என்பதையுங் காட்டிப் பெண்ணுருவைச் சில நேரங்களில் அர்த்த நாரீஸ்வர மூர்த்தி தன்னுள்ளேயே மறைத்த லையும் புலப்படுத்துகிறது. திருமாலைப் போல் சிவபெருமானும் தம் திருமார்பில் உமையைக் கொண்டார் என்று காட்டி உமை பங்கர் மூர்த்தத்தில் ஒரு புதுமையையும்கூடத் தருகிறது. சம்பந்தர் பாசுர அடிகளான, 'பெண் கொண்ட மார்பு' *(3.362.1)* பெண் கொள் திருமார்பு *(1.70.3)* என்னும் பகுதிகள் இதற்குச் சான்றாகின்றன. இங்ஙனம் பல் வேறு தத்துவக் குறிப்புகளையும் சிறுசிறு சொல்வேறுபாடுகளால் புலப்படுத்தி உமை யோர் பாகனாய வடிவின் ஆழமும் அகலமும் நுட்பமும் உணரச் செய்த தேவாரப் பாசு ரங்கள் பல உள.

# கீதைக் குறள்கள்

அறநெறியண்ணல் கி.பழநியப்பனார்

## மக்களின் தெய்வ அசுர குணங்கள்

(தெய்வாசுர ஸம்பத் விபாக யோகம்)

அஞ்சாமை தூயமனம் யோகம் அறிவினில்
துஞ்சாமை ஈகை யுடன் (16[1)

புலனடக்கம் யாகம் மறைநூற் புலமை
நலமாம் தவம்நேர்மை மற்று ( ,, )

அகிம்சை சினமின்மை வாய்மை அமைதி
சகிப்பு தயைஇனிய சொல் (16[2)

துறவு புறங்கூறாமை நாணம் தூய்மை
உறவினில் வஞ்சமின்மை, ( ,, )

வன்மை மனவுறுதி வெஃகாமை துன்பத்தில்
என்றும் கலங்கா நிலை (16[3)

பணிவுடைமை ஆகிய பல்குணம் காத்தல்
அணியாகும் தெய்வீகத் திற்கு ( ,, )

அகம்பாவம் கோபம் அறியாமை கர்வம்
பகட்டு கடுஞ்சொற்களைப் (16[4)

பேசுவோர் தீய அசுரகுணம் பெற்றதோர்
மாசுடை மக்களாவர். ( ,, )

தெய்வகுணம் வீடுதரும்; தீய அசுரகுணம்
உய்விலாப் பந்தம் தரும். (16[5)

பார்த்தா! கவலைப் படவேண்டாம் உன்பிறப்பு
ஓர்தெய் வீகப்பிறப்பா கும் ( ,, )

தெய்விகத் தன்மை தெள்வா உரைத்திட்டேன்
நையு(ம்)அசுரர்குணம் கேள்! (16[6)

செய்யத் தகுவதை காதைசிந்தியார்
மெய்பேசார் தீயவொழுக் கர் (16[7)

உலகியலில் காமமே உற்றபயன் என்றிருப்பர்
சலனமுற்ற பொய்மனத் தர் (16[8)

இக்கொள்கை யோர்பூமிக்(கு) ஏதம்;அறிவின்றி
திக்கெலாம் செய்திடுவர் கேடு (16[9)

காமவெறி கர்வம் மயக்கம் பகட்டுடன்
மாமதம் தீமைநாட் டம், (16[10)

சாகும் வரையும் தணியாக் கவலையுடன்
ஏங்குவர் காமநோ யால் (16[11)

எல்லையிலா ஆசைகுரோ தம்காமம்என்
றலைவர்
அல்வழியில் செல்வம்சேர்ப் பர். 16[12)

இதையடைந் தேன்நான் உறுதியாய் இன்னும்
அதையடை வேன்எனநிற் பர். (16[13)

என்பகை வோரைநான்அழித்தேன்
தலைவனாய்
வன்மையுடன் வாழ்வேன் இனி, (16[14)

உயர்குலத்தான் செல்வன் ஒருநிகர் இல்லான்
இயைந்தயா கம்பலசெய் வேன் (10[15)

என்றெல்லாம்எண்ணியேகாமத்தில் மூழ்கிப்பின
சென்றடை வர்நர கம் (16[16)

செல்வம் செருக்கு பிடிவாதம் கர்வம்
நல்வழியில் செல்லவி டாது. (16[17)

அகந்தையால் கோபம் அறிவு மயக்கம்
மிகவேதன் னுள்ளும் பிறர் (16[18)

உள்ளும் நானிருப்ப தையும் உணரா து
கொள்வர் வெறுப்பு பகை ( ,, )

அத்தகைய தீயோர் அவனியில் அசுரகு
ணத்துடன் தோன்றியுழல் வர் (16[19)

அம்மூடர் இங்கு அசுரகுலத் தில்பிறந்
தும்தாழ்ந்தும் வாழ்ந்திடு வர் (16[20)

கடுநரகின் வாயிற்க ளாம்குரோதம் காமம்
படுலோபம் என்றெண்ணி அஞ்சு (16[21)

இந்நரக வாயில்மூன் றையும் எரித்தோர்
நிந்தையின்றி வாழ்ந்தடைவர் வீடு (16[22)

சாத்திர மாமிந் நெறியைத் தவிர்த்திடுவோர்
தூர்த்தராய் முத்தியடை யார் (16[23)

சாத்திரம் கூறும் தகுந்ததுஆ காததைப்
பார்த்துக் கருமஞ்செய் நன்று. (16[26)

# கருணை

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்



கருணையென்பது ஒப்பற்ற ஒரு பொருள் அதனை எல்லோரும் உடையவர்களாக இருக்க வேண்டும். இறைவர் கருணையே வடிவானவர். அவருடைய கருணையை நாம் பெற வேண்டும். எல்லோருக்கும் இறைவருடைய கருணையைப் பெறுவதில் விருப்பந்தான். ஆனால் விரும்பியபடி எல்லோரும் பெறுகின்றார்களா? இல்லை. ஒரு சிலர்தான் பெறுகின்றனர். பலர் கடவுளுடைய கருணையைப் பெறாமல் வெல்கின்றனர். ஏன்!

கடவுள் சிலருக்குக் கருணை செய்தும், பலருக்குக் கருணை செய்யாமலும் இருப்பார் ஆயின் அவர் பாரபட்சம் உடையவர் ஆகின்றனர் அன்றோ! கடவுளுக்கு எல்லோரும் குழந்தைகள் தானே? அன்புள்ள தாய் எல்லாக் குழந்தைகளையும் ஒன்று போல் அன்பு பாராட்டி ஆதரிப்பாள். சில குழந்தைகளுக்குப் பாலுஞ் சோறும் ஊட்டி, சில குழந்தைகளைப் பட்டினி போடுவாளா?

சர்வஜீவதயாபரரான ஆண்டவர் பலருக்கு கருணை புரியாமலிருப்பாராயின், அதற்கு தகுந்த காரணம் யாது! அவரோ கருணைக் கடல், பலர் வந்து தண்ணீரை முகந்து கொண்டு போவதனால் கடல் வற்றிவிடாதே!

அடியவரும், தவசீலரும், சிவஞானிகளும் ஈசனுடைய கருணையை நாடி நாடி, ஓடி ஓடிப் பெறுகின்றனர்.

''எந்தநாள் கருணைக் குரித்தாகு நாள்
எனவும்
எள்ளிநயம் என்னைவாட்டுதே'' என்கிறார். சீலராகிய தாயுமானார்.

கடவுளுக்குக் கருணையே திருமுகங்கள்; அவருடைய கருணையருவி பொழிகின்றது.

''முகம் மொழி கருணை போற்றி''
''கருணைகூர் முகங்களாறும்''
''கருணை பொழி கமலமுகமாறும்''
''உனதுமுக கருணைமலர் ஓராறும்''

காகங்கள் கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லிற்கு முன் நிற்காது. அதுபோல், கோடி வினை கூடி நிற்கினும், கடவுளுடைய கருணை வெள்ளத்தில் ஒரு துளிபடுமாயின் கோடி வினையும் பறந்து போம்.

''காகமானதுகோடி கூடிநின்றாலும் ஒரு
கல்லின்முன் எதிர் நிற்குமோ
கர்மமானதுகோடி முன்னே செய்தாலுநின்
கருணைப்ரவாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்கவல்லதோ!''

இறைவருடைய கருணை கடலினும் பெரிது; சமானமில்லாதது. . அது ''தனிப் பெருங் கருணை, கேழில் பரங்கருணை''


இத்தகைய இறைவருடைய கருணையை எல்லோரும் எய்த வேண்டாவோ!

கடவுள் கருணை செய்வதில் தயங்குவதில்லை; ஒருவருக்கு ஒரு வண்ணமும், மற்றொருவருக்கு மறுவண்ணமும் அவர்பால் இல்லை. அவர் பாரபட்சம் அற்றவர். எல்லா உயிர்களும் அவருக்கு ஒன்றுதான்.

தண்ணீரில் பஞ்சை வைத்தவுடன் பஞ்சு தண்ணீரை இழுத்துக் கொள்ளுகின்றது. கல்லைத்தண்ணீரில் வைத்தால் கல் தண்ணீரை இழுப்பதில்லை. ஏன்! அது தண்ணீரின் குற்றமா? கல்லின் குற்றமா? கடினமாக இருப்பதனால் கல் தண்ணீரைத் தனக்குள் பெறவில்லை. மென்மையான பஞ்சு, சாம்பல் இவைகள் தண்ணீரைப் பெறுகின்றன.

அதுபோல் கடினசித்தம் உடையவர்கள் கடவுள் கருணையைப்பெறுகின்றார்களில்லை. இரக்கமுள்ள சாதுக்கள் கடவுளுடைய கருணையைப் பெறுகின்றனர். கருணையினால் தான் கருணையைப் பெற வேண்டும். வைரத்தினால் வைரத்தை அறுப்பதுபோல் என்றுஅறிக.

நம்மினும் தாழ்ந்த உயிர்க்ள்படுகின்ற துன்பத்தைக் கண்டு, நாம் உள்ளம் இரங்கிக் கருணை புரிவோமானால், நம்மினும் மேலான இறைவர் நம் மீது கருணை புரிகின்றார். நாம் யார் மாட்டுங் கருணை காட்டாது கல்லைப் போல் இருப்போமாயின் கடவுள் கருணை நம் மீது எப்படி எய்தும்! கடவுள் கருணை மீது குற்றமில்லை. அதனைப் பெறுவதற்கு நாம் ஆயத்தமாக இல்லை. அதற்குரிய பண்பு பெறவில்லை.



அதனால் நாம் கருணையுடையவர்களாகத் திகழ வேண்டும். மன்னுயிர்களைத் தம் இன்னுயிரைப் போல் எண்ணி இரங்க வேண்டும்.

'எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணி யிரங்கவு நின்
தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே'

''எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதவர்கள்
தெய்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ.''
—தாயுமானார்.

கருணை என்பது அணுத்துணையுமில்லாதவர் வெறும் பூசையினாலும், ஜபத்தினாலும் இறைவனுடைய கருணையைப்பெறமாட்டார்.

''கருணையினால் கடவுளுடைய கருணையைப் பெறலாம்'' என்பதற்கு எடுத்துக் காட்டாக அடியில் வரும் சரிதை விளக்குமாறு காண்க.

நாகபுரி என்பது ஒரு சிறிய ஊர். அந்த ஊரில் அநேகமாக ஏழைகள்தான் வாழ்ந்தார்கள். இரண்டொருவரே தனவந்தர். எல்லோரும் நன்கு உழைத்து வயிறு வளர்த்து வந்தனர். கமலம் என்பவளுக்கு ஒரு பெண் குழந்தை. குழந்தை பிறந்த ஓராண்டில் அவள் கணவன் மாண்டுவிட்டான். கூலிவேலை செய்து தன் குழந்தை கண்ணம்மாளைக் கமலம் காப்பாற்றி வந்தாள். கணவனையிழந்து வறுமையினால் வாடி வருந்துங் கமலத்தை உறவினர் ஒருவரும் நெருங்குவதில்லை. ''உண்டான போது தானே கோடானுகோடி பேர்'' கமலம் புல்லறுத்தும், நெல் குத்தியும், பாத்திரம் விளக்கியும் அதனால் வரும் காசுகளைக் கொண்டு கேழ்வரகு, சோளம், கம்பு வாங்கிக் கஞ்சி செய்து. குழந்தையும் தானும் பசியாறுவாள். அரிசியன்னம் முக்கியமான நாளில் தான் சமைக்க முடிந்தது. வெய்யிலில் வேலை செய்வதனால் அவளுடைய பொன்மேனிகரித்து விட்டது. தலைமயிர் உதிர்ந்துவிட்டது. சில சமயங்களில் வேலை கிடைக்காது. குழந்தைக்கு மட்டும் உணவு கொடுத்துவிட்டுத் தான் பட்டினி கிடப்பாள். அவளுடைய பரிதாபத்தைக் கண்டு மனம் இரங்குவார் ஒருவரும் இல்லை.

கமலத்தின் மனம் பால் போன்றது; கனிந்த உள்ளம் படைத்தவள். தன்னைவிட எளியவர்களைக் கண்டால் கண்ணீர் விடுவாள். இனிய உரை கூறி ஏதாவது தந்து உபசரிப்பாள். கண்ணம்மாளுக்கு வயது ஏழு. ஆடுவதும் பாடுவதுமாக இருந்தாள். வீதியில் விளையாடுகின்ற பொழுது மற்றைய குழந்தைகள் தங்க வளையல், தங்கக்கொடி. தங்கக் காப்பு, பட்டுச் சட்டை. முதலியன அணிந்து அழகாக வருவதைப் பார்ப்பாள். தாயிடம்

ஓடி ''அம்மா'? அதோ பார். அது மாதிரி எனக்கு நகை செஞ்சிப்போடு' என்று சிணுங்கி அழுவாள். கஞ்சிக்கே வழியில்லாத அவள் நகைக்கு எங்கே போவாள்! குழந்தையை மார் போடு அணைத்து 'அம்மா? அழாதே. நீ பெரியவளாக ஆனவுடன் உனக்கு நிறையச் செய்து போடுவேன்; இப்போது போட்டுக் கொள்ளக் கூடாது'' என்பாள். கண்ணம்மாள் 'போம்மா? இப்பவே போடு. அவங்கெல்லாம் என்னைப் போல்தானே இருக்கின்றார்கள். அம்மா? எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கு. பட்டுச் சொக்கா...'' என்று அழ ஆரம்பித்தாள். கமலம் மகளை வெகுபாடுபட்டு சமாதானப்படுத்தினாள்.

கொடிய பஞ்சம் வந்துவிட்டது. எங்கும் மழையில்லை. கிணறு குளங்கள் எல்லாம் வற்றி விட்டன. குடிதண்ணீர் கிடைப்பது அரிதாகி விட்டது. ஜனங்கள் அளவற்ற வேதனை அடைந்தனர். பட்டினியால் பலர் மடிந்தனர். உணவை நாடி அங்கும் இங்குமாக அலைந்து ஏழைகள் கால் ஓடிந்தனர். 'என் செய்வோம்' என்று ஏங்கி மனம் இடிந்தனர். 'பசி, பசி' என்ற சொல்லோ எங்கும் முழங்கியது. வாயில்லாத உயிர்களாகிய ஆடுமாடுகள் நாய் முதலியவைகளும் தண்ணீரும் உணவும் இன்றித் தவித்தன. பறவைகள் பட்டினியால் வாடி வருந்தின.

பட்டினித் துன்பத்தாலும், வெய்யிலின் கொடுமையாலும் கமலத்தின் உடல் நலம் குன்றியது. பாயும் படுக்கையுமாக ஆனபின் நோயினால் நொந்தாள். வேலை செய்தாலே உணவு கிடைப்பது அரிது. வேலையின்றி படுக்கையில் உள்ள அவளுக்கு உணவு எப்படிக் கிடைக்கும்! பாவம் பட்டினியால் பதை பதைத்தாள். கண்ணம்மாளும் பட்டினி, பன்னிரண்டு வயதுடைய அவள் உடம்பு மெலிந்துவிட்டது.

கண்ணம்மாள் தாயார் படுக்கையில் கிடந்து பரிதவிப்பதைக் கண்டு மனம் வருந்தினாள். 'அம்மா? உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது! தாங்கள் வரவர இளைத்துப் போய்விடுகின்றீர். பேசுவதற்குக் கூட உங்களுக்கு வலிமையில்லை. அம்மா? நான் என்ன செய்ய வேண்டும்! கடவுள் நம்மைப் பரிசோதிக்கின்றார்.'' என்று விம்மி விம்மி அழுதாள்.

கமலம், 'குழந்தாய்? அழாதே. முற்பிறப்பில் புண்ணியம் புரியாதவர் இப்பிறப்பில் துன்புறுவர்; நமது வினையை நாம்தான் அனுபவித்தல் வேண்டும்; கடவுள் பாரபட்சம் இல்லாதவர். நான் வயது சென்றவள்; பழுத்தவோலை நீ இளஞ்சிறுமி; குருத்தோலை. உன்னைப் பற்றித்தான் நான் கவலைப்படுகின்றேன். நீ என்னைப்பற்றி வருந்தாதே. நீ என் குலக் கொழுந்து' என்று மகளின் முதுகைத் தடவிக் கொடுத்து முகத்தைத் தொட்டு முத்தம் கொடுத்தாள்; அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன.

கண்ணம்மாள் தன் தாயின் பசியைத் தீர்த்து அவள் உடம்பைப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணி, உணவு எங்கே கிடைக்கும் என்று ஏங்கிய மனத்துடன் வெளியே சென்றாள். இரண்டு மூன்று வீட்டில் சென்று, 'அம்மா பசி காதடைக்கிறது, ஒரு பிடி சோறு கொடுங்கள்' என்று கெஞ்சிக் கேட்டாள். 'சீ நாயே போ மூஞ்சியப்பாரு, ஓடு, ஓடு நிற்காதே'. என்று விரட்டியடித்தார்கள். எங்கும் அவளுக்கு ஒருபிடி சோறுகூட கிடைக்கவில்லை. அவள் கால்கள் தடுமாறின. கண்கள் பஞ்சடைந்தன. தாய்க்கு உணவு எப்படியாயினும் தர வேண்டும் என்ற உறுதியினால் சிறிது தைரியத்துடன் நடந்தாள்.

ஒரு வீட்டிலே கோதுமை ரொட்டி செய்து தட்டு நிரம்ப அடுக்கி குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்ட கண்ணம்மாள் மெல்ல வாசற்படியருகில் நின்று 'அம்மா? மெத்தப் பசியாக இருக்கின்றது. உயிர் துடிக்கிறது, ஒரு ரொட்டி கொடுங்கள்' என்று கம்மியகுரலில் கேட்டாள். அந்த வீட்டு அம்மை மனம் இரக்கமுற்று உடனே அன்புடன் ஒருரொட்டியைத்தந்தாள். கண்ணம்மாளின் முகம் மலர்ச்சியுற்றது. அகங் குளிர்ந்து, 'அம்மா? வீட்டில் என் தாயார் உடல் நலம் இன்றிப் பசியால் வாடி வருந்துகின்றாள். அவருக்கு ஒரு ரொட்டி கொடுங்கள்' என்று கேட்டாள். அந்த அம்மை உடனே பதில் சொல்லாமல் மற்றும் ஒரு ரொட்டியை தந்தாள்.

கண்ணம்மாள் அளவற்றஆனந்தமடைந்து தாய்க்கு ஒரு ரொட்டியைக் கொடுத்துவிட்டு தான் ஒரு ரொட்டியைத் தின்ன வேண்டும் என்று எண்ணி விரைந்து வந்தாள். வழியில் ஒரு நாய் மிகுந்த பசி தாகமுற்றுக் களைத்து, உலர்ந்த நாவை நீட்டிக் கொண்டு குழிந்த கண்களுடன் இருந்தது. அந்த நாய் கண்ணம்மாளைக் கண்டு, தன் வாலையாட்டி 'பசிக்கின்றது; ஏதாவது கொடு'' என்ற குறிப்பில் தலையசைத்து அவளைப் பார்த்தது. கண்ணம்மாளின் மனம் உருகியது. ''ஐயா! இதற்கு எவ்வளவு பசியோ! வாயில்லாத பிராணி. நமக்காவது கடவுள் வாயைக் கொடுத்தார். கேட்டு வாங்கிச் சாப்பிடலாம். பாவம், இதற்கு வாயில்லை. மிகமிகப் பசியால் வாடியுளது' நமது பங்கு ரொட்டியைக் கொடுத்து இதன் பசியை ஆற்றவேண்டும்' என்று எண்ணினாள். ஒரு ரொட்டியை எடுத்து துண்டு துண்டாகச் செய்து நாய்க்குத் தந்தாள். நாய் மிக விரைவாகச் சாப்பிட்டது. சிறிது தண்ணீருங் கொணர்ந்து குடிப்பித்தாள். நாயின் களைப்பு தீர்ந்தது. நன்றியறிவுடன் வாலை மிகவும் ஆட்டியது. அதன் மகிழ்ச்சியைக் கண்டு கண்ணம்மாள் மகிழ்ந்து தாயை நாடி நடந்தாள். நாயும் அவள் பின்னே சென்றது. கண்ணம்மாள் வீட்டிற்குள் நுழைந்து பசியுடன் படுக்கையில் அயர்ந்திருந்த தாயை எழுப்பி, 'அம்மா' இந்த ரொட்டியைத் தின்று தண்ணீர் குடியுங்கள்' என்று நீட்டினாள். கமலம், 'மகளே ரொட்டி ஏது! எந்த புண்ணியவதி தந்தனர்! நீ பாதி சாப்பிடு, பாதி கொடு எனக்கு' என்

றாள். 'அம்மா? ஒரு புண்ணியவதி தந்தாள். ஒன்று நான் தின்றுவிட்டேன். இது உங்களுக்கு தானம்மா. நீங்கள் சாப்பிடுங்கள். மிகவும் களைப்பாகவும் பசியாகவும் இருக்கின்றீர்' என்றாள். அந்த சமயம், 'அம்மா மெத்த பசி, சாப்பிட்டு நாலைந்து நாட்கள் கடந்தன, உயிர் போகின்றார்ப்போல இருக்கின்றது அம்மா? புண்ணியவதி சிறிது உணவு கொடுத்துக் காப்பாற்றுங்கள்' என்று ஒரு பிச்சைக்காரன் கூவினான். ரொட்டியைப் பிட்டு வாயில் வைக்கும் தருணத்தில் கமலம் அந்தக் குரலைக் கேட்டாள். அவள் மனம் உருகியது. உடனே அந்த ரொட்டியை அந்தப் பிச்சைக்காரன் கையில் கொடுத்து, 'அப்பா? சாப்பிட்டு இளைப்பாறு' என்றாள். அதைக் கண்டு கண்ணம்மாள் திகைத்தாள்.

அந்த ரொட்டியைப் பிச்சைக்காரன் தின்று 'அம்மா? உங்களுக்குக் கடவுள் எல்லா நலங்களையும் அருள் புரிவார். பசித்துன்பம் உங்களை ஒருபோதும் அணுகாது நீடூழிக்காலம் வாழுங்கள்' என்று கூறிவிட்டுச் சென்றான். கமலம் மிகுந்த திருப்தியுடன் கண்களை மூடினாள். கண்ணம்மாள் தாய் பசித்திருந்தும் தரும சிந்தையுடன் ஏழைக்கு உதவிய கருணையை எண்ணி ஒருவாறு கண்ணயர்ந்து விட்டாள்.

அருட்ஜோதி வடிவுடன் ஒரு தெய்வம் கமலத்தின் கனவில் தோன்றியது. அவ்வொளிக் கடவுளைக் கண்டு கமலம் திகைத்துக் கும்பிட்டு நின்றாள். 'அம்மா? உன் கருணைக்கு நாம் மகிழ்கின்றோம். உன் கருணையைவிட உனது திருப்புதல்வி கண்ணம்மாளது கருணை உயர்ந்துள்ளது. அவளுக்குக்கிடைத்தஇரு ரொட்டியில் ஒன்றை நாய் வடிவுடன் வந்த எனக்குத் தந்தாள். பிறகு பிச்சைக்காரன் வடிவில் வந்த எனக்கு நீ உன் பசியைப் பொருள் படுத்தாமல் ரொட்டியைத் தந்தனை, தாயும் மகளும் கருணையின் சொரூபங்களாகஇருக்கின்றீர்கள். நானே நாயாகவும் பிச்சைக்காரனாகவும் வந்து உங்கள் இருவருடைய அன்பையும் அளந்து அறிந்தேன. நீங்கள் இனி எந்நாளும் அழியாச் செல்வத்துடன் வாழக் கடவீர்கள்' என்று அருள்புரிந்து மறைந்தது. கமலம் திடுக்கிட்டு எழுந்தாள். கனவிலே கண்ட அந்த அருட்ஜோதி வடிவத்தை அங்கும் இங்குமாகத் தேடினாள். அவள் குடிசை பொன் மாளிகையாக மாறியது. ஒரு புறம் தானியக் குவியல்கள்; ஒரு புறம் தனக்குவியல்கள்; ஒரு புறம் நவரத்தினக் குவியல்கள்; ஒருபுறம் ஆடை ஆபரணங்கள். அஷ்ட ஐஸ்வரியங்களும் நிறைந்து இருந்தன. வறுமையின் சிறுமை பறந்து நீங்கியது. 'கடவுளே? உன் கருணையே கருணை. இந்த ஏழைகளுக்கு இத்துணைப் பெரிய கருணை புரிந்தீரே எம் பெருமானே உம்மை ஒரு போதும் மறவேன்'' என்று வாயார வாழ்த்தினாள். கண்ணம்மாள் எழுந்து நவநிதிகளையும் பொன்மாளிகையையுங்கண்டாள். தன் தாயின் திருவடிமேல் வீழ்ந்து, 'அம்மா? இது என்ன அதிசயம்? இவைகள் எவ்வாறு வந்தன. மாயையா! கனவா!' என்று வினாவினாள்.



**கண்டனம் செய்யும் சொல் எதையுமே சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக்கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.**

**—சுவாமி விவேகானந்தர்**

கமலம், 'உன் பங்கு ரொட்டியை நாய்க்கு தந்துவிட்டு, நான் சாப்பிட்டு விட்டேன்' என்று கூறி என்னைச் சாப்பிட வேண்டினாயல்லவா? நாய் வடிவத்திலே வந்தவர் கடவுள். அவரே மீண்டும் பிச்சைக்காரனாக வந்தார். என் கனவிலே தோன்றி அருள் புரிந்தார். பிறருக்குக் கருணை புரிந்த உனக்கும் எனக்கும் கடவுள் கருணை புரிந்தார்'' என்றாள். கண்ணம்மாள் கடவுளின் கருணையை எண்ணி, எண்ணி இதயங் குளிர்ந்தாள். அன்று தொட்டுஅவர்கள் திருமாளிகைக்கு முன் கூடை கூடையாக ரொட்டியும், அன்னமும் வறியவர்க்கு வழங்கப்பட்டன. பஞ்சம் கொஞ்சமும் இன்றிப் பறந்தது. ஏழைகள் திரள்திரளாக வந்து பசியாறினார்கள். நிறைந்த ஏரியில் உள்ள தண்ணீர் பல்லாயிரம் வயல்களில் பாய்ந்து பயிரைத் தழைக்கச் செய்வது போல், கமலத்திற்குக் கடவுள் தந்த செல்வம் பல்லாயிரம் ஏழைகள் வயிற்றை நிரப்பி உயிரைத் தழைக்கச்செய்தது.



# நாராயணா என்னும் நாமம்

புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ. பி.எட்.,

மயர்வற மதி நலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவருள், திருமங்கையாழ்வாரும் ஒருவராவர். இவர் அருளிச் செய்த பெரிய திருமொழியில் முதல் பத்து பாசுரங்கள் திருமந்திரப் பெருமைகளைக் கூறுவனவாகும்.

ஸ்ரீமந் நாராயணன், இம்மண்ணுலகில் வாழும் மக்கள் சம்சாரக் கடலில் விழுந்து துன்பப்படுவதைக் கண்டு வருந்தினார். அவர்களைப் பிறவிக் கடலிலிருந்து கரையேற்றி, பரமபதத்திற்கு அழைத்துக்கொள்ள விரும்பினார். அதற்குத் துணையாக வேதங்களையும் சாஸ்திரங்களையும் தோற்றுவித்தார். இவற்றைக் கற்று, உணர்ந்து, கற்றபடி நடந்து நற்கதி அடைபவர் சிலரேயாயினர்.

எனவே வேதங்களின் சாரமும் திருவெட்டெழுத்துமாகிய திருமந்திரத்தை தானே நாராயணன் என்ற ஆசாரியனாகவும், நர நாராயணன் என்ற மாணாக்கனாகவும் இருந்து பத்ரிகாசிரமத்திலே முதன் முதலில் வெளியிட்டருளினார். அதுவும் இரகசியமாயிற்று அடுத்து திருமங்கையாழ்வாருக்கு உபதேசித்தபோது அருளிச் செயலாயிற்று. திருமங்கையாழ்வார் ஸ்ரீமந்நாராயணனிடம் பெற்ற திருமந்திரத்தின் பெருமையைத் தமது பெரிய திருமொழியில் பத்து பாசுரங்களில் விளக்கியருளினார்.

இத்திருமந்திரத்தை நாம் தக்க ஆசாரியனிடமிருந்து பெற்று, பேரன்புடனும், தூய உள்ளத்துடனும் ஓதினால்; ''உயர்ந்த பாகவத குலத்தையும் கைங்கர்ய மாகிற செல்வத்தையும், பரமபதத்தையும் ஞானமாகிய செல்வத்தையும்'' பெறுவோம். மற்றும் 'நமது துன்பங்கள் அனைத்தும் தீயினில் பட்ட பஞ்சு போல் மாயும், பெற்றெடுத்த தாயைக் காட்டிலும் மிகுந்த நன்மைகளைத் தரும்''. எனவே இதனை ''நலம் தரும் சொல்'' என்றார் திருமங்கை மன்னர்.

இப்பத்துப் பாசுரங்களில் அமைந்த கருத்துகளை அனைவரும் அறிந்து பயன் பெறும் வண்ணம் எளிய தமிழில் அடியேன் இக்கட்டுரையைத் தந்துள்ளேன். இவற்றைப் படித்து அறிந்துஸ்ரீமந் நாராயணன் திருவருள் பெற்று நற்பேறு அடையலாம். அவற்றை திருமங்கை மன்னரின் வாக்கினில் காண்போம்.

## நாடி நான் கண்டது

பெருந்துன்பத்திற்கு இருப்பிடமும் காரணமுமான இவ்வுடலில் பிறந்து, உடல் எது உயிர் எது என்று பிரித்து அறிய முடியாத படி வாழ்ந்தேன். இவ்வாழ்வில் இளம் பெண்களின் உடலின்பத்தையே பெரிதும் விரும்பி, அவர்களையே துணையாகக் கொண்டு, அவர்களைப் பின்தொடர்ந்து ஓடினேன். மனம் ஓரிடத்தில் நில்லாமல் துன்பங்களைத் தொடர்ந்து அநுபவித்தேன். படர்வதற்குக் கொம்பில்லாமல் அலையும் கொடியைப் போல் வாடினேன். எம்பெருமானின் பரம கருணையாலே ஞானமாகிய பெருஞ் செல்வத்தைப் பெற்றேன். இறையுணர்வே இனிது என்பதையும், சம்சாரம் துன்பம் தரும் தீய கடல் என்பதையும் உணர்ந்தேன். மற்றும் எம்பெருமான் திருநாமத்தைச் சொல்வதற்கும் தகுதியற்ற நான் அவன் அருளால், 'நாராயணா' என்ற திருநாமத்தின் சிறப்பினை உற்றவாறு உணர்ந்து கொண்டேன்.

''நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''

## நான் உய்ய நாவினால் கொண்டது

பெண்களைக் கண்டு'என் உயிரே? எனக்கு அமிர்தம்போல் இனிமையானவளே' என்று பலவாறு புகழ்ந்து அவர்கள் தரும் உடலின்பத்தையே நினைத்து, நீர்ப்பண்டம் போல் உருகினேன். அவர்களின் மார்பகத்தையே துணையாகக் கொண்டிருந்தேன். ஸ்ரீமந் நாராயணனே எனக்குக் காவலன் என்று உணராமல் பாபியாகிய யான் பல நாட்களை வீணாகக் கழித்தேன்.

மென்மையான சிறகினையுடைய அன்னப் பறவை தனது பெட்டையுடன் இன்பமுற்று வாழும் நீர்நிலைகளால் சூழப் பெற்ற திருக்குடந்தையில் எழுந்தருளியிருக்கும் ஆராவ



தானியலட்சுமி

முதனை வணங்கினேன். அவன் அருளால் "நாராயணா என்னும் நாமத்தை என் நாவினால் சொல்லி பல நன்மைகளைப் பெற்றேன்.

"என் நாவினால் உய்ய
நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"

## அடியார் உள்ளத்து இருப்பான் திருநாமம்

நான் நன்மையே விரும்பினேன். ஆனால் அதற்கு வேண்டிய நல்ல செயல்களைச் செய்யாமல் பாபங்களையே அதிகமாகச் செய்தேன். பெண்களுடைய வடிவழகையே மனத்தில் நினைத்துக் கொண்டிருந்துவிட்டு, ஊமையர் கண்ட கனவினைப் போல் என் காலத்தை வீணே கழித்து விட்டேன். மன்மதனுக்குத் தந்தையான திருமால் சரணடைந்தவர்களின் உள்ளத்தை விட்டுப் பிரியாதவன். அவனுக்குரிய பெயர் திருநாராயணன். அந்தத் திருநாமத்தின் பெருமையை உணராமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தேன். அடியேன் நற்கதி அடைவதற்கு உதவி புரியும் 'நாராயணா' என்னும் நாமத்தின் சிறப்பைக் கண்டு கொண்டேன்.

"தம்மடைந்தார் மனத்திருப்பார்
நாமம் நானுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"

## நன்று நான் உய்ய

நிலையில்லாத பொருள்களுக்காக விரும்பியும் பிறநாட்டு மண்ணை அபகரிக்க போர் புரிந்து வெற்றியை விரும்பியும், வேல் போன்ற கொடுமையான கண்களையுடைய வேற்கண் பெண்களின் உடலின்பத்தையே பெரிதும் நினைத்து இருந்தேன். வேறு ஒன்றிலும் நிலைபெறாத மனத்தையுடைய யான் என்ன செய்வதென்று அறியாமல் இருந்தேன். எம்பெருமானாகிய திருமாலை அடைவதற்கு வழி ஒன்றும் அறியவில்லை.

வலிமை மிக்க பன்றியாய் நீ அன்று அவதாரம் செய்தாய். உன் கருணையாலே, புலன்களால் கிடைக்கும் சிற்றின்ப விருப்பத்தை ஒழித்துவிட்டேன். நன்மை பெற்று, உய்வதற்கு உரிய வழியாக 'நாராயணா' என்னும் திருநாமத்தை உம்மிடம் இருந்து பெற்றேன்.

"நன்று நானுய்ய நான் கண்டு
கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்."

## சிக்கெனத் திருவருள் பெற்றேன்

இதற்கு முன் உன் உடமையான ஆத்மாவை எனது உடமை என்று நினைத்து இருந்தேன். பல பாவங்களைச் செய்தேன்.

கண்ட கண்ட விஷயங்களிலெல்லாம் அதிக விருப்பம் கொண்டிருந்தேன். திருமாலாகிய உமது அருளால் நீ பரமாத்மா, யான் ஜீவாத்மா என்னும் தெளிவைப் பெற்றேன். பின்பற்ற வேண்டிய நல்ல வழியை அறிந்துகொண்டேன். உமது திருவருள் பெற்றேன். எனது எலும்பும் நரம்பும் உருகி, நீராய் பெருகியதால் உடல் நனைந்தேன். என் குரல் தழுதழுத்தது. பின் எனது கண்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தது. இரவும் பகலும் 'நாராயணா' என்னும் உனது திருநாமத்தைச் சொன்னேன்.

"உள்ளெலா முருகிக் குரல்தழுத்
தொழிந்தேன்
உடம்பெலாம் கண்ணநீர் சோர
நள்ளிரு ளளவும் பகலும் நானழைப்பேன்
நாராயணா வென்னும் நாமம்."

## நான் உய்ய கொண்டது

ஸ்ரீமந் நாராயணனாகிய உமது நற்குணங்களை அநுபவிப்பதில் முழு திருப்தி யுடையவர்கள் உனது அடியவர்கள். நீர் அவர்களுக்கு நன்மை செய்யும் நண்பனாகவும் தந்தையாகவும், உறவினராகவும், இறைவனாகவும், வாழ்நாளாகவும் இருக்கின்றீர்! அரக்கர்கள் அஞ்சும்படி அம்புகளாலே அவர்களைக் கொன்று குவித்த கோதண்ட ராமனல்லவா நீ.

மணம் மிக்க மலர்ச் சோலைகளையும் மிக உயரமான மதிளையுமுடைய தஞ்சாவூரில் உள்ள திருமாமணிக்கோயில் என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள நீலமேகப் பெருமாளாகிய உம்மைச் சேவித்து மன நிறைவு கொண்டேன். அதற்குத் தக்க துணையான உமது நாராயணா' என்னும் திருநாமத்தை அறிந்து கொண்டேன்.

"மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான்கண்டு
கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்"

## நற்பொருள் காண்மின்

புலவர்களே? இவ்வுலகில் மக்கள் இழி தொழில் செய்து திரிகின்றனர். அவர்களின் இல்லறவாழ்வின் தன்மை, பிறப்பின் தன்மை, அவர்களின் முற்கால ஏழ்மை நிலை, இக்கால செல்வ நிலை, அவர்களது தன்மை ஆகியவை எப்படிப்பட்டவை என்பதை அறியமாட்டாத வர்களாக உள்ளனர்.

நீங்கள் அவர்களை நோக்கி உண்மைக்கு மாறாக, வேண்டியதெல்லாம் தரும் கற்பக மரமே என்றும், வள்ளல்களே என்றும் பல வாறாகப் புகழ்ந்து பாடுகின்றீர்? இத்தகைய பொய்யான புகழ்ச்சியை விட்டு, என்னோடு வாருங்கள். நான் சொல்லும் நற்சேதியைக் கேளுங்கள். என்னைப் போல் நற்குணத்தைப் பெறுங்கள்.

நீர் நிலைகளால் சூழப்பட்ட திருக்குடந் தையில் (கும்பகோணத்தில்) எழுந்தருளியுள்ள ஆராவமுதனைக் கண்டு வணங்குங்கள். நமக்கு எல்லா உறவும் அவனே என்ற பொருள் அடங் கிய ''நாராயணாய'' என்ற திருமந்திரத்தைப் பேரன்போடு சொல்லி, பாடி நல்வாழ்வு பெற்று வாழுங்கள். இந்தத் திருமந்திரமே நற்பொருள் என்பதைக் கண்டு களியுங்கள்.

''சூழ்புனல் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீருய்மின்
நாராயணா வென்னும் நாமம்''

## நற்றுணையாகப் பற்றினேன்

அடியேன் தக்க ஆசாரியனை அடைந்து சாத்திரங்களைக் கேட்டு அறியவில்லை. மெய்: வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன் களின் வழியே மனத்தினைச் செலுத்தினேன். ஆகையால் ஆத்மாவைப் பற்றிய மெய்யறிவை யும் நல்லெண்ணங்களையும் பெறவில்லை. இம் மண்ணுலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் தீமையே செய்திருந்தேன்.. இருந்தாலும் ஸ்ரீமந் நாராயணன் பரம கருணையாலே இத் தீமைகளெல்லாம் என் மனத்திலிருந்து நீங்கின. திருநாடாகிய பரமபதம் செல்வதற் கான வழியை எண்ணி, அதை அடைவதற்கு நல்லதோர் துணையாக 'நாராயணா' என் கின்ற திருமந்திரத்தைப் பெற்றேன்.

''செல்கதிக் குய்யுமா றெண்ணி
நற்றுணை யாகப் பற்றினேன் அடியேன்
நாராயணா வென்னும் நாமம்''

## நலம் தரும்சொல்

''நாராயணா'' என்னும் திருநாமத்தைத் தக்க ஆசாரியனிடமிருந்து கற்று, ஓதுபவர்க்கு உயர்ந்த பாகவத குலத்தையும், கைங்கர்ய மாகிற செல்வத்தையும் கொடுக்கும். அவர் களது துன்பத்தை வேர் அறும்படிச் செய்யும். கைங்கர்யத்திற்குப் பாங்கான பரம பதத்தை அருளும். நமது பெற்ற தாயைக் காட்டிலும் பல நன்மைகளையும், மெய்யறிவையும் ஊட்டும். இத்தகைய பல நன்மைகளைச் செய்யும் ''நாராயணா'' என்னும் திருநாமமே நமக்கு நலம் தரும் நற்சொல்ஆகும்.

''பெற்ற தாயினு மாயினச் செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''

## செஞ்சொலால் எடுத்த தெய்வ நன்மாலை

மேகங்கள் தவழுகின்றதும் வண்டுகள் ஒலிக்கின்றதுமாகிய சோலைகளை உடைய, திருமங்கை நகரில், தோன்றிய திருமங்கை யாழ்வார் கலியுகத் துன்பத்தைப் போக்கி னார்.

அவருடைய செஞ்சொல்லாகிய அருளிச் செயல் பாடல்கள் தெய்வத் தமிழாகும். இத் திருமொழியைக் கொண்டு, சிறந்த இறை தொண்டையும், திருமாலடியார் தொண்டினை யும் செய்யுங்கள். மரணத்தருவாயிலும், துன் பங்கள் நேர்ந்த போதிலும், 'நாராயணா'' என்ற இத்திருமந்திரத்தைச் சொல்லுங்கள். உங்கள் துன்பங்கள் நெருப்பிலிட்ட பஞ்சுபோல் தீய்ந்து விடும். அமுதத்தைப் போன்ற இத் திருமந்திரம் பாபங்கட்கு விஷமாக நின்று அவற்றை அழிக்கும். நமக்குப் பலவகையிலும் நன்மை தரும். எனவே இத்திருநாமத்தைச் சொல்லி துன்பங்களைப் போக்கி, நன்மை பெறுவோம்.

''செஞ்சொலால் எடுத்த தெய்வநன் மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின்
துயர்எரி கொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு
நாராயணா வென்னும் நாமம்.

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்!**

---

## ஆன்மீக பலம்

**மிருக பலத்தால் அல்லாமல்,**
**ஆன்மீக பலத்தால் மட்டுமே**
**இந்தியா எழுச்சி பெறப் போகிறது.**

**—சுவாமி விவேகானந்தர்**

# அஞ்செழுத்தின் மகிமை

முத்துகிருஷ்ணன், Msc., B.Ed.,

மக்களை நல்வழிப்படுத்தி பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்பவை சமயங்களே. உலகில் உள்ள சமயங்களில் முன்னோடியாகவும் மூத்ததாகவும் விளங்குவது இந்து சமயமே. இந்து சமயத்தின் இரு கண்களாகப் போற்றப் படுவது சைவமும் வைணவமும் ஆகும். சைவ சமயத்தை நாயன்மார்களும் வைணவத்தை ஆழ்வார்களும் இவ்வுலகில் தழைத்தோங்கச் செய்தார்கள். அதனால்தான் இந்து சமயம் இன்னும் இம்மண்ணில் ஆலவிருட்சம்போல் வேருன்றி வளர்ந்து வருகிறது. சைவத்திற்கு பன்னிரு திருமுறைகளும் வைணவத்திற்கு நாலாயிர திவ்விய பிரபந்தமும் நூல்களாக அமைந்துள்ளன. 'ஓம் நமசிவாய' என்பது சைவத்திற்கு உரிய பஞ்சாட்சரமந்திரம். ''ஓம் நமோ நாராயணா என்பது வைணவத்திற்கு உரிய மந்திரம் ஆகும். 'நமசிவாய என்னும் அஞ்செழுத்தின் பெருமையை விளக்குவதே இக்கட்டுரை ஆகும்.

## சமய குரவர்

சைவ சமயக்குரவர்கள் அப்பர், சம்பந்தர் சுந்தரர், மாணிக்கவாசகர் என அழைக்கப்படு கிறார்கள்.

'பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிருநாவலூர் வன்தொண்டர்பதம் போற்றி
ஊழிமலிதிருவாதவூரர்திருத்தாள் போற்றி''

என்பது நால்வர் துதிபாடும் செய்யுள் ஆகும்.

## சம்பந்தர் தேவாரம்

பன்னிரு திருமுறைகளில் முதன்மையாக வைத்துப் போற்றப்படுவது தேவாரம். இதில் சம்பந்தர் அருளியது ஒன்று முதல் மூன்று திருமுறை உள்ளது ஆகும். 'நமசிவாய' என்பது அஞ்செழுத்து கொண்ட மந்திரம் ஆகும். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தர் 'தோடுடைய செவியன் விடையேறி யோர் தூவெண்மதி சூடி' எனப் பதிகம் பாடி அம்மையப்பன் அருளால் ஞானப்பால் உண்டவர், பாண்டிய மன்னனின் வெப்பு நோயை நீக்கியது, எலும்பை பெண்ணாகப் படைத்தது அவர் செய்து காட்டிய அற்புதங் களில் சிலவாகும்.

''துஞ்சலூந்துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே''

''தும்மல் இருமல் தொடர்ந்தபோழ் தினும்
வெம்மை நரகம் விளைந்தபோழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையானுந்துணை அஞ்செழுத்துமே''

என்று அஞ்செழுத்தின் பெருமையை ஞான சம்பந்தர் பாடுகிறார். மண்ணில் நல்ல வண்ணம் வாழ நாள்தோறும் அஞ்செழுத்தை ஓத வேண்டும் என்கிறார்.

## நாவுக்கரசர் தேவாரம்

தேவார திருமுறைகளில் நான்கு முதல் ஆறு முடிய உள்ளவற்றை அருளிச் செய்தவர் அப்பர் என அழைக்கப்படும் நாவுக்கரசுப் பெருமான். சமண மதத்திலிருந்து சைவமதத் திற்கு மாறியவர். அதனால் மன்னனின் சோதனைக்கு ஆளாகி பஞ்சாட்சர மந்திரத் தால் அவற்றை முறியடித்து வெற்றி கண்டவர்

''சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கைதொழ
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமசிவாயவே''

வாழ்வுக்கு ஒளி காட்டுவது அஞ்செழுத்து. நமக்கு ஞானத்தையும் கல்வியையும் தந்து நன் னெறி காட்டுவது நமச்சிவாய மந்திரம் ஆகும். இதை

'நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே''

என்று பாடுகிறார்.

நமச்சிவாயப்பதிகம் நம் வாழ்வின் இன்னலைப் போக்கும் மருந்தாகும். திருநாமம் அஞ் செழுத்தை நாள்தோறும் ஓதினால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று பாடுகிறார்.

## சுந்தரர் தேவாரம்

தேவாரத்தின் ஏழாம் திருமுறையை அரு ளியவர் நம்பி ஆரூரர் என அழைக்கப்படும் சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆவார். பொன்னார் மேனியனாகிய இறைவனே சுந்தரர் பொருட்டு தூதுசென்றான்என்றால் அவருடைய பெருமை தான்என்னே! இறைவனைத்தோழனாகக்கண்ட வர் சுந்தரர். எம்பெருமானே அடி எடுத்துக் கொடுக்க, 'பித்தாபிறைசூடி பெருமானே' எனப் பாடியவர் அஞ்செழுத்தின் மகிமையை கூறு மிடத்து:

,'மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிற
வாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ் சீர்க்கற
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே''

என்று பாடுகிறார். என்நாவானது எப்பொழுதும் நமச்சிவாய மந்திரத்தை சொல்லிக்கொண்டிருக்கும் என்கிறார்.

**மாணிக்க வாசகர்**

எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்தை அருளிச் செய்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். திருவாசகம் தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தத்தை அள்ளித் தரும்தேன். திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி. மாணிக்கவாசக சுவாமிகள் தனது திருவாசகத்தின் முதலில் சிவபுராணத்தில் 'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க' எனத் தொடங்குகிறார்.

''போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறம்எனைப் போக்கல்கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சய' சய போற்றி போற்றி''

என்று பாடுகிறார் திருவாசகம் திருவேசறு சுட்டறி' ஒழித்தல் பகுதியில்

''நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே''

என்று பாடுகிறார்.

**நக்கீரர்**

பதினோராம் திருமுறையில் நக்கீரர் அஞ்செழுத்தின் பெருமையை

''வாயிலே வைக்கும் அளவில் மருந்தாகித்
தீயபிறவிநோய் தீர்க்குமே-தூயவே
கம்பெருமாதேவியொடு மன்னு கயிலாயத்(து)
எம்பெருமான் ஓர் அஞ்செழுத்து''

என்று பாடுகிறார்.

**அஞ்செழுத்தின் ஆற்றல்**

வேதத்தின் நாமமாக விளங்குவது அஞ்செழுத்து, அது சிறுபஞ்சாட்சரம். அதாவது நமசிவாய அல்லது சிவாயநம என்று ஓதும் ஒலியாகும்.

''சிவாயநம வென்று
சிந்தித் திருப்பார்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை''.

எனவே நாம் ஒவ்வொருவரும் பஞ்சாட்சர மந்திரமாகிய அஞ்செழுத்தை நாள்தோறும் ஓதி இறைவன் அருள்பெறுவோமாக.

---



ஜீவராசிகளுக்குச் செய்கிற உபகாரத்தால் சகல பிராணிகளுக்கும் மாதா பிதாவாக இருக்கப் பட்ட பரமேசுவரனுக்கே பூஜை பண்ணியதாக ஆகிறது. இதைத்தான் திருமூலர் திருமந்திரத்திலும் சொல்லியிருக்கிறது.

நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயின்
படமாடக் கோயில் பகவற்க தாமே.

இதற்கு அர்த்தம், 'மக்களுக்குச் செய்கிற உதவி சாட்சாத் ஈஸ்வர ப்ரீதியாகச் செய்கிற பூஜையே ஆகும் என்பது.

—ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

---

# வினை வழி உயிர்

**வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.**

இறைவனின் செயல் மனிதனின் எண்ணங்களுக்கு மிகவும் அப்பாற்பட்டது. மனித அறிவினால் அறிய முடியாதது. மனித உணர்வுகளால் உணர முடியாதது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், ஆட்கொள்ளுதல் ஆகிய ஐந்தொழிலுக்கும் அதிபதியானவன் இறைவன். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். காரணமின்றி காரியம் இல்லை. நினைவு ஒரு காரணம். சொல்லும் செயலும் காரிய வடிவமாகும். நினைவுக்கும் காரணம் வேண்டும். அந்தக் காரணத்தை 'வினை' அல்லது 'செயல்' என்று சொல்லலாம். 'வினை' என்னும் 'சூட்சும' காரணத்தை ஆதாரப் பொருளாகக் கொண்டு உயிர்கள் உய்யும் பொருட்டும், சாந்த நிலையை அடையும் பொருட்டும் ஐந்தொழில்களையும் இறைவன் செய்கிறான். இச்செயல் உயிர்களிடத்தில் இறைவன் கொண்ட அளவற்ற கருணையினாலேயே நடைபெறுகிறது. ஐந்தொழில்களையும் இறைவன் செய்ய காரணமாகவும் அடிப்படையாகவும் வினையை உருவாக்குவது உருவத்தை அடைந்த உயிர்களாகும். .

வினை அதிக சக்தி வாய்ந்தது. யாராலும் அழிக்க முடியாதது. மந்திர, தந்திர மாயா ஜால கட்டுகளுக்கும் கட்டுப்படாதது.

''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்''
—இளங்கோ அடிகள்

'ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்—திருக்குறள்.

வினை உயிரினங்கள் அத்தனைக்கும் பொதுவானது. பொருத்தமானது. எல்லாவற்றையும் ஆட்டிப் படைப்பது. பாலில் நெய்போல், மலரில் மணம் போல் மண்டிக் கிடப்பது. பாரபட்சமற்றது. ஜாதி, மத, இன, உயிர் இன வேற்றுமைகள் இல்லாதது. அதிகவீரியமுள்ளது. சாரமானது, காரமானது, பாசமற்றது. ஆனால் பாச மாயையாகிப் பல்லுயிர்களையும் பற்றி ஊடுருவிப் பாய்ந்து உறுத்து வருவது. பற்றற்றது. முற்றிலும் களையப்படும் வரை பிறப்பு தோறும் தொடருவது. பிறப்பு தோறும்உருத்து வந்து உயிர்களை ஆட்டிப் படைப்பது. ஐம்புலன்களையும் தன்வயப்படுத்திக் கொள்வது தன் சக்தியால் ஆட்கொள்ளுவது. ஐம்புலன்களுக்கும் தானே அதிபதியாவது. புலன்வழி தன் ஆதிக்கத்தைச் செலுத்துவது, உணர்வுகளைத் தூண்டுவது. அசையாதது. வேண்டாம் வேண்டாமென்று வெறுத்தாலும் விடாதது. போதும் போதுமென்று புலமபினாலும் தொடருவது. புண்ணியமாவது. பாவமாவது. பாசத்தின் நிலையாகி மனிதனைப் பதற வைப்பது. புண்ணியத்தின் நிலையாகி புலன்கள் வழி இன்பத்தை நுகர வைப்பது. அறிவின் வழியில் நின்று அரசாட்சி செய்வது. செயல்களுக்கு எல்லாம் காரணமானது. தன்னை அறியாமல் தன்னுள் இருப்பது'.நவகோள்கள்' வழி வந்து நியாயம் செயவது. சத்தியமாகி 'நீதி கொடுப்பது' நன்மையும் தமையும் 'நானே' என்பது. வெறுத்து ஒதுககினாலும் வேறு இடம் போகாதது. கருவனுக்குள்ளே கரைந்து, நிறைந்திருப்பது, ஊற்றாகி உள்ளே ஒழுந்திருப்பது, தாயாய், தந்தையாய், சகோதர சகோதரியாய் உடனிருப்பது, சுற்றமாய், சூழலாய் சுற்றியும் பற்றியும் நிற்பது. ஊராகி, நாடாகி விரிந்து பரந்திருப்பது. நீக்கமற நிறைந்துள்ளது. நிம்மதி கொடுப்பது. நிம்மதி கெடுப்பது, மதியைக் கொடுப்பது. மதியைக் கெடுப்பது. செல்வத்தை அள்ளிக் கொடுப்பது, அல்லல்பட்டு அற்றாது, அழுத கண்ணீராகிச் செல்வத்தைத் தேய்க்கும் படையாவது..பாசப் பற்று வலையில் சிக்க வைப்பது. ஆசை, காம குரோதங்களாகி உயிரினங்களை ஆட்டிப் படைப்பது. வாதமென்றும் வழக்கென்றும் வாட்டி எடுப்பது. சொத்தென்றும், சுகமென்றும் சூழ்ந்து கொண்டுள்ளது. வறுமையென்றும் செழுமையென்றும் வாய்ப்பாகி வந்தது. வியாதிகள் பலவாகி வேதனையைத் தருவது மெய்மையாகி வந்து மேன்மை கொடுப்பது. பொய் புரட்டுகள் பலவாகி புத்தியில் புழுதியாய்ப் படிவது. நன்றியை மறக்க வைத்து நரகத்தில் சேர்ப்பது. கோபம் ஆணவமாகி கொடுங்கோல் ஆவது, சொத்து சுகம் என்னும் சுமையாய் கனப்பது. புகழும் பெயரும் விளங்கி பெருமை சேர்ப்பது. கலையாகி ஞானமாகி கண்ணியம் சேர்ப்பது. ஒளியாகத் தோன்றி உய்யும் வழி காட்டுவது. சம்சார வாழ்க்கை சகதி என்று உணர வைப்பது. பாவக் கடலைக் கடக்க தோணியாய் வருவது. இருளை அகற்றி மெய்ஞானம் ஊட்டுவது. .பக்தரின் சக்தியாகி பரத்தில் சேர்ப்பது. பாவியரின் தோணி யாக பாவ நரகில் கவிழ்ப்பது. அஞ்சா நெஞ்சமாய் ஆண்மையாவது. கோழையாகி, பேடியாகி குடியைக் கெடுப்பது. ருசிக்க வைத்து பசியைத் தீர்ப்பது, பசி பொறுக்க மாட்டாமல் புரட்டுகளைப் பேச வைத்து வாழ்வைப் பாழாக்கி



விடுவது. ஆணாகிப் பெண்ணாகி ஆள வருவது. உருண்டு திரண்டு பெண்ணுருவாகி பெருங்கேடு செய்வது. பேருதவி செய்து செழிக்கச் செய்வது எமனுக்கு ஏவல் செய்ய தூதாகி வருவது. விட்டகுறை தொட்ட குறை முடிவில் முடிவது. வேண்டுதல் வேண்டாமை இலாதானை விரும்ப செய்வது. வேதாந்த சாரத்தை விளங்க வைப்பது. பிறவியறுத்து பிறவாமை சேர்ப்பது. மோகத்தைச் சுட்டெரித்து மோட்சத்தைக் கொடுப்பது. பாவத்தைச் சுட்டெரித்து பரம பதம் சேர்ப்பது. நல்லோர் நினைவில் நாணயம், சத்தியம் காப்பது. தர்மம் வளர்க்கும் தாயாக இருப்பது. நீதி விளங்க நீசனை அறுப்பது, கற்பு நெறி காக்கும் காவலனாவது. தான தர்மத்தை தான் விரும்பி ஏற்பது. நினைவு சொல், செயல்களில் பதிவுற்றிருப்பது இருந்தபடி இருத்திக் காட்டுவது. மறந்து இருந்ததனை மறந்தபடி மறைத்து காட்டுவது. என்ன புண்ணியம் செய்தனையோ என்று மகிழ்ந்து சொல்ல வைப்பது என்ன பாவம் செய்தனையோ என்று தேம்பி அழவும் செய்வது. செயலுக்குத் தக்க பலனைத் தருவது. நாம் இப்படிபோனால் அப்படி வரும். அப்படிப் போனால் இப்படிவரும். வினை முடிந்த நிலையில் மட்டுமே வீடு பேற்றினைக் காட்டும். நம் கண்ணுக்குக் காட்டப்பட்ட வீட்டில் நம்மை நுழைய வைப்பதும் வாழ வைப்பதும் முழுமையாக இறைவன் கருணை.

ஒருவனுக்குத் தான் செய்த தர்ம பலனை பொறுத்துப் பிறவி கிட்டுகிறது. நல்ல கர்மா செய்தாலும், தீய கர்மா செய்தாலும், செய்த கர்ம பலன்களை அனுபவிக்கும் பொருட்டு பிறவி கிட்டுகிறது.

''தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தவிர்தலும் அவற்றோரன்ன''—
என்பது புறநானூறு

செய்த பாவத்தையும் புண்ணியத்தையும் கட்டாயமாக அனுபவித்தே தீர வேண்டும். மனதினால் செய்தவற்றை மனதினாலும், சொல்லால் செய்தவற்றை சொல்லாலும், உடலால் செய்தவற்றை உடலாலும் நிச்சயமாக அனுபவித்து தீர்க்க வேண்டும் என்பது விதி. ஆனால் மெய்வருத்தக் கூலி தரும் என்பதற்கேற்ப உழைப்புக் கேற்ற பலன் நிச்சயம் கிடைக்கும்.

மனிதனுக்கு ஆறு அறிவுகள் கொடுக்கப் பட்டுள்ளது. ஆறாவது அறிவு பகுத்தறிவு எனப்படுவது. நல்லது கெட்டது எது என்பதைப் பகுத்து அறியும் தன்மையினால் பகுத்தறிவு எனப்படுவது. பிறர் சொல்லக் கேட்டு அறியும் அறிவு கேட்பறிவு-கேள்வி ஞானம். இத்தனையையும் அமைத்து மனிதனுக்கு கொடுத்தது இறைவனின் கருணை. ஆனால் வாழ்க்கைப் பாதையில் பலவிதமான சூழ்நிலை

களைச் சந்திக்கும் காலநிலைகளில் ஒருவனுக்கு பகுத்தறிவு எப்படிப் பயன்படுகிறது. அல்லது எப்படி பகுத்தறிவைப் பயன்படுத்துகிறான் என்பதைப் பொறுத்து வினை அமைகிறது. இதையே கர்மா என்று பொதுவாகச் சொல்கிறோம். முதலில் தனக்காகவும், பிறகு தன் குடும்பத்திற்காகவும், பின்பு தம்மைச் சார்ந்துள்ள சுற்றம் நண்பர்கள், அமைப்புகள்மற்றும் ஜாதி இவற்றுக்காகவும் பிறகு நாட்டுக்காகவும் பணிகளைச் செய்கிறான். தான் வணங்கும் தெய்வத்துக்காகவும் பல காரணங்களை முன்னிட்டு பல காரியங்களைச் செய்கிறான். ஒவ்வொரு செயலை எண்ணும் போதும், சொல்லும் போதும், செய்யும்போதும் ஒவ்வொரு கர்மாவைச் செய்ய நேரிடுகிறது. இதனைத் தவிர்க்க முடியாது. சாதாரணமாக மனிதனின் சுபாவம் சும்மா இருக்க முடியாது.

''நீர் வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்''— புறநானூறு.

பல சூழ்நிலைகளில் செய்யும் நற்செயல்களுக்கு நல்ல வினைகளும், தீய செயல்களுக்கு தீய வினைகளும் உருவாகிறது. கர்ம பலன்களைப் பற்றுடன் செய்தாலும் அல்லது அறியாமல் செய்தாலும் செயல்களைப் பொறுத்து பலன்கள் கொடுக்கப்பட்டு விடுகிறது. பிரார்த்தனைகள் மூலமாகவும். பல பற்றுகள் காரணங்கள் பற்றிக் கொண்டு உயிரில் தொற்றிக் கொள்கிறது. ஆகவே. பாவ புண்ணியங்களின் பலன்களை அனுபவிக்க பலப்பல பிறவிகளை எடுக்க நேரிடுகிறது. இப்படி பற்பல பிறவிகளில் செய்யும் வினைகள் நல்வினையாய் தீவினையாய் ஒவ்வொரு பிறவியிலும் உருத்து வந்து பிறவிக்கு காரணமாக அமைகிறது. ஒரு பிறவியில் மிக மிக நல்லவன் ஒருவனுக்கு மிகக் கொடியது நேர்வதும், கெட்டவன் ஒருவனுக்கு நற்பலன்கள் நடப்பதும் எப்போதோ எங்கோ செய்யும் கர்ம பலனேயன்றி வேறில்லை. இப்படிப்பட்ட நல்லவனுக்கா இக்கதி என்பதும் இவன் கெட்டதே செய்தாலும் நன்றாய் வாழ்கிறான் என்று வியக்க வைப்பதும் அவரவர் செய்த வினையின் நுகர்ச்சியே காரணம். காரணமின்றி காரியமில்லை. எனக்கு ஒருவன் தீங்கு செய்துவிட்டான் என்று அடுத்தவனைக் குறை கூறுவது அர்த்தமற்ற செயல். இது கர்ம பலனே என்று உணராமல், அடுத்தவனைக் குறை கூறுவது மூலம் அல்லது அடுத்தவன் மனம் புண்படும்படியாகச் செய்வதென்றும் புதிய கர்மாக்களை உருவாக்க வழி செய்யும். இது தவிர்க்கப்பட வேண்டும். காரியத்தைக் கண்டு அஞ்சி, பேதலித்து துடிக்கிற மனிதன் அதற்கான காரணம் என்ன என்று சற்று சிந்தித்தால் அல்லது அதற்கான சற்குருவை நாடினால் நல்லதல்லவா! அப்படிச் சிந்தித்து பெருமையுடன் இருக்கும்போது புதிய கர்மாக்களை உருவாக்குவதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். 'பொறுத்தார் பூமி ஆள்வார்'' என்பது சான்றோர் வாக்கு.

''வினை' என்பது ஒரு சூட்சமமான அதிசக்தி வாய்ந்த விதை. இது கருவறை முதல் கல்லறை வரை உயிரோடு ஊறி வளர்ந்து இன்ப துன்ப நுகர்வுகளுக்கு காரணமாகிறது. கல்லறையில் உடலை உறங்கவிட்டு அல்லது அக்கினியில் உடலை சாம்பலாக்கி விட்டு உயிருடன் ஒட்டி உறவாடிக் கொண்டே இருப்பது.

''பிறப்புறு வைகலைத் தொட்டுப்
பின்னரே
இறப்புறு நாள்வரை யாவர்க்கு
ஆயினும்
உறப்படுதுய்ப்பு எல்லாம்
ஊழின் ஊற்றமால்''

—கந்தர் அலங்காரம்..

ஒவ்வொரு செயலின்போதும் ஒவ்வொரு வகையான பலன் கிட்டும். அதே நேரத்தில் ஒவ்வொரு வினையும் உருவாகும். .செயல் முடியும்போது பலன் உடனேயே கிட்டலாம். காலங்கடந்தும் கிட்டலாம். பலனோடு தோன்றும் வினை தேக்கி வைக்கப்படுகிறது. செய்த பலனை உடனே அனுபவிக்கமுடிகிறது. ஆனால், வினையை உடனே அனுபவிக்கும்படியாக இறைவன் வைக்கவில்லை. அடுத்து வரும் பிறவிகளிலே அனுபவிக்கும்படியாக வைத்துள்ளான். பொதுவாக நற்பலன்கள் நடக்கும் போது, மனிதன் தன் அறிவும், தன் முயற்சியும் காரணம் என்றும், கெட்ட பலன் நடக்கும் போது அடுத்தவன் காரணம் என்றும் எண்ணுகிறான். சிறிது சிந்திக்கும் தன்மை உள்ளவன். நடப்பதெல்லாம் தலைவிதி என்று பலனை அனுபவித்துக் கொண்டு சும்மா இருப்பான். புத்தி பலம் உள்ளவன் எதிர்த்து போராட்டமும் செய்வான். சிலர் குட்டக் குட்டக் குனிவர். அதனால் சிலர் குனியக் குனியக் குட்டுவர். ஆக குனியக் குனிய குட்டுபவனும், அதே நேரத்தில் குட்டக் குட்ட குனிபவனும் அறிவற்றவன். மனித சக்தி முழுவதையுமே பயன்படுத்தி தார்மீக வழியில் தமக்கு இன்னல்கள் நேராமல் காப்பதில் தவறு ஏதுமில்லை. ஆனால் அந்த முயற்சியில் எவருக்கும் துன்பமின்றி செய்வதே சாலச் சிறந்தது. கர்மக் கோலத்தில் நுழைந்து சிக்கிக்கொண்டு குட்டுபடும் உயிர்கள் ஏராளம். மிகச் சிலரே இறையருளால் விரைவாக சிக்கலிலிருந்து மீள முடியும். ஆனால் அதற்கும் ஒரு நல்ல கர்மா செய்திருக்க வேண்டும்.

தவறு செய்தால் நிச்சயம் தண்டனை உண்டு என்று ஒருவன் உள்ளத்தில் எண்ணம் எழும்போதுதான் தவறுசெய்யத் தயங்குவான். தவறு செய்துவிட்டு அதனை நியாயப்படுத்த சாக்கு போக்கு சொல்ல மாட்டான். அப்படி ஒவ்வொரு மனிதனும் நினைக்க ஆரம்பித்தால்தான் சமுதாயத்தில் குற்றங்கள் குறையும். எத்தனை தவறுகள் செய்தாலும் தான் தப்பிவிடலாம் என்று எண்ணுவதும், தவறுகளை மூடி மறைக்க மேன்மேலும் தவறுகள் செய்து கொண்டு போவதும், பணம், பதவி, அந்தஸ்து இவைகளை துஷ்பிரயோகம் செய்வதும் தனக்கும் சமூகத்திற்கும் பெருங்கேடு விளைக்கும். இதனால் வான் பொய்க்கும். பருவகால நிலைகளும் மாறும்.

—(தொடரும்)

# விஞ்ஞானமும் - மெய்ஞ்ஞானமும்

டாக்டர் சாயிமாதா சிவபிருந்தா தேவி
திலகவதியார் ஆதீனம், புதுக்கோட்டை

பொருள்களைப் பகுத்துப் பகுத்து (உடைத்து உடைத்து) காண்பது விஞ்ஞானம், பொருள்களைத் தொகுத்துத் தொகுத்து (சேர்த்துச் சேர்த்து) பார்ப்பதுமெய்ஞ்ஞானம்.

விஞ்ஞானம் வாழ்விற்குத் தேவையானது தான், ஆயினும் அழிவிற்கும்அடிப்படையானது அதுவே. மெய்ஞ்ஞானம் தன்னைத் தானறிய உதவும்; தரணி வாழவும் வழிகாட்டும்.

அணுவை உடைத்துப் பார்த்து, எலக்ட்ரான், புரோட்ரான், நியூட்ரான் இருப்பதாக சிகாகோ பல்கலைக்கழக விஞ்ஞானி கண்டு பிடித்து நோபல் பரிசினைப் பெற்றார்.

இன்றைக்கு 600 அல்லது 800 ஆண்டு கட்கு முற்பட்ட மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவாசகத்தில் 51 பதிகங்களில், இரண்டாவது பதிகமான திருவண்டப் பகுதியில், அணுவின் தன்மையைத் தம் அளப்பரிய ஆற்றலால் அறிந் துணர்ந்து அருளுகின்றார்.

'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப்பெறுங்காட்சி;
ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொருகோடியின் மேற்பட விரிந்தன''

நூற்றொரு கோடிக்கும் அதிகமானபொருட்கள் அணுவிற்குள் இருப்பதாக உணர்த்தும் இவரது மெய்ஞ்ஞானம் எலக்ட்ரான், புரோட்ரான், நியூட்ரானைவிட மிஞ்சிவிட்டதல்லவா!

உலகில் எல்லா மரங்களும் பூத்துக் காய்த்துக் கனி தருவதுதான் இயல்பு? மரபுங் கூட?

ஆனால் அத்தி பூப்பது கிடையாது;

இத்தி பூப்பது கிடையாது.

இவ்விரண்டும் பூக்காமலே காய்த்துக் கனி தரு கின்றன. விஞ்ஞானம் இதற்கு விடை தர வில்லை.

மெய்ஞ்ஞானம் விடை தருகிறது.

உலகியலுக்கு அப்பால் நடைபெறுகின்ற செயல்கள் யாவும் மாயா சிருஷ்டியின் லீலா விநோதங்கள் என்று அறிவிக்கின்றது. மரங் களுக்கு உயிர் உண்டு என்ற ஆராய்ச்சி செய்து ஜே. சி. போஸ் என்பவர் நோபல் பரிசு பெற் றார்.

அருள் நந்தி சிவாச்சாரியார் இயற்றிய சிவஞான சித்தியார் என்ற சைவ சித்தாந்த சாத்திர நூலிலே,

''மரங்கள் உயிரல்லவென்று

மறுத்துச் சொன்னாய்

வாடுதல் பூரித்தலால் மரங்கள் உயிராகும்''

இதனைத் தமிழன் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்திருந்தால் ஜே.சி. போசிற்கு முன்னால் இவனே நோபல் பரிசினைப் பெற்றிருக்க முடியும்.

சக்ரவாகம் என்றொரு பறவை. இது இன்று வரை தரையைத் தொட்டதே கிடை யாது. இரவு பகல் வானவெளியிலே சஞ்சரித்து கொண்டிருக்கும். முட்டை போட வேண்டிய தருணம் வரும்போது, வான முகட்டிலிருந்து சற்றே கீழிறங்கும். காற்றின் அழுத்தத்தி னாலோ அல்லது வெப்பத்தின் சூட்டினாலோ, வானவெளியில் அது இடுகின்ற முட்டை விரிசல் அடைந்து, முட்டையிலிருந்து சக்கரவாகக் குஞ்சு வெளியே வரும். வானவீதியில் பறக்கும் தாய்ச் சக்கரவாகம்; முட்டையிலிருந்து வெளி வந்த தன் சின்னஞ்சிறுகுஞ்சைத்தன்இறக்கைக் குள் பற்றிக் கொண்டு வான்வெளியில் பறந்து மேலே சென்று விடும். இதற்கு விஞ்ஞானத் தில் பதில் இல்லை. மெய்ஞ்ஞானம் மாயா சிருஷ்டி இது எனக் கூறும்.

உலகிடை எண்ணாயிரம் பாம்பு வகைகள்; இப்போது பெருகிவரும் உற்பத்தியில் அதிக மாகக்கூட இருக்கலாம்.

எல்லாப் பாம்புகளும் முட்டையிட்டு அதி லிருந்து பாம்புக்குட்டிகள் வெளிவர; விரியன் பாம்பு மட்டும் முட்டை இடாமல், உரியகாலம்

வந்ததும் வயிறு வெடித்து விரியன் பாம்புக் குட்டி வெளிவந்ததும், தாய்ப் பாம்பு செத்து விடுகின்றது. இதெல்லாம் விஞ்ஞானத்திற்கு எட்டாத மகாமர்மங்களாகும். யுத்த காலத்தில் ஆண்கள் அதிகம் பேர்கள் மடிகின்றனர். அந்த நேரத்தில், ஆண் இனம் குறைகின்ற நேரத்தில், உலகிடைப் பிறக்கும் குழந்தைகளில், ஆண் குழந்தைகளே அதிகம் பிறக்கின்றனர். மெய்ஞ்ஞானம் என்று சொல்லக்கூடிய பொருள் வல்லமை இதுவோ என்றெண்ணிடத் தோன்றுகின்றது.

அரப்பளீஸ்வரர் சதகம் பாடல் பெற்ற கொல்லிமலை (இது இராசிபுரத்திற்கு அப்பால் சேலம் மாவட்டத்தில் இருக்கின்றது) மேல் மலையிலே சர்க்கரை விழுங்கி என்றொரு செடியிருக்கின்றது. இந்த இலையில் சிலவற்றை வாயிலே போட்டு ருசி பார்த்தால் அதிமதுரமாக இருக்கும். இதன் பின்னர் நம் வாயில் எத்தனைச்சர்க்கரைபோட்டாலும் இனிக்காது. எனவே இச்செடிக்குச் சர்க்கரை விழுங்கி என்ற பெயர் ஏற்பட்டது. இச்செடியின் மூலமாக புதுமையான ஆராய்ச்சிகள் செய்து இதன் கோட்பாட்டை உணரவேண்டும். இங்கேயே 'வெட்டு வாங்கி' என்றொரு செடி? கையோ காலோ வெட்டுபட்டவர்கள் இச்செடியருகில் சென்றால் வெட்டுப்பட்ட இடம் ஒட்டிக் கொள்கின்றது. இயற்கையாக இப்படியொரு செடியிருப்பதை விஞ்ஞானத்தின் மூலம் ஆராய்ந்து இதில் உள்ள மெய்ஞானத்தை உலகிற்கு அறிவிக்கலாம்.

தொழுகண்ணி; அழுகண்ணி என்றிரண்டு மரங்கள்.

அதிகாலை 6 மணிக்குச் சற்று முன்பாக புலர்ந்து புலராப் பொழுதில் இந்த மரம் முற்றிலும் தம் கிளைகளோடு மண்ணைத் தொட்டு வணங்கித் தலை நிமிர்கிறது. மாலை 6 மணிக்குச் சற்று முன்பாக சந்தியா காலத்திலே (பகலும் இரவும் சந்திக்கின்ற நேரம் சந்தியா காலம்) மறுபடியும் தன் கிளைகளோடு பூமியை தொட்டு வணங்கி நிமிர்ந்து நிற்கும்.

அழுகண்ணி' என்ற மரம் அதிகாலையில் சிறு பொழுது. இதன் இலைகளிலிருந்து, கண்ணீர்த் துளிகள் பொல சொட்டுச் சொட்டாக நீர் வடியும். மாலையிலும் இப்படியே சிறு பொழுது (சிறிது நேரம்) நீர் வடியும். எனவே இதற்குப் பெயர் 'அழுகண்ணி' என்று கூறினார்கள். இதெல்லாம் நாம் முப்பது வருடங்களுக்கு முந்தி கொல்லிமலை மேல்மலையிலே கண்டு அதிசயித்த காட்சிகள், இப்போது இச் செடிகள்; மரங்கள் உண்டா என்று கண்டறிய வேண்டும். கண்டறிந்து இவற்றைப் பயனாக்க பலனாக்க பலரும் முன் வருதல் வேண்டும்'

'கோபுரம் தாங்கிப் பூண்டு' என்றொரு செடி, தீக்காயம் பட்ட இடத்திலே இந்த இலையின் சாற்றைப் பிழிந்தால் புண் ஆறுவதோடு காயமும் தெரிவதில்லை-'கீழா நல்லி' என்ற கிராம வழக்கிலும், 'நித்யகல்யாணி' என்று மருத்துவமுறையிலும் அழைக்கப் பெறுகின்ற செடியை வேருடன் இலையுடன் பறித்து நீரில் அலம்பி, கிள்ளி எடுத்து காஷாயம் வைத்து 7 முறைகள் சாப்பிட கொடிய நோயாகக் கருதப்படும் மஞ்சள் காமாலை மறைந்து போகிறது.

'கையாந்துறை' என்று கிராம வழக்கிலும் 'கரிசலாங்கண்ணி' என்று மருத்துவ முறையிலும் அழைக்கப் பெறுகின்ற செடியை-அதன் இலைகளை அரைத்துச் சாப்பிட நீரிழிவு, சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய்கள் காலக் கெடுவில் நலமாகின்றது. முருங்கைக் கீரை நீரிழிவைக் கட்டுப்படுத்துகின்றது. முள்ளு முருங்கை என்ற இலையை அரிசியை ஊற வைத்து அதனுடன் அரைத்து, ரொட்டியாகச் செய்து சாப்பிட கபம் என்னும் சளி சரியாகிறது.

செம்பரத்தைப் பூவை அதன் நீண்ட காம்புடன் பாலில் அரைத்துக் கலக்கிப்பிள்ளை பேறில்லாத ஆண்களும் பெண்களும் 48 நாட்கள் தொடர்ந்து உண்டு வர, மலட்டுத் தன்மை நீங்கிப்பிள்ளைப்பேறுகிடைக்கின்றது.

மஞ்சள் பூவுடன் கூடிய சிறு நெருஞ்சியை அதன் முள்ளை நீக்கி நீரில் அலம்பி, அதை வறுத்து நீர் ஊற்றி, ஒரு படியை கால்படியாக வற்ற வைத்து, காலை ஒரு அவுன்ஸ், மாலை ஒரு அவுன்ஸ் சாப்பிட்டு வர (7 வேளைகள்) வயிற்றில் உடம்பில் உள்ள உஷ்ணம் குறைந்து குளிர்ச்சி உண்டாகும்.

இன்று மருத்துவத் துறையில் விஞ்ஞான ரீதியாகப் பல வித முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது. உடம்பில் ஒவ்வொரு பாகத்திலும் உற்ற நோயைக் கண்டுபிடிக்கத் தனித்தனி மருத்துவர்கள், டாக்டர்கள், எம்.டி.க்கள், எம்.எஸ்.க்கள். ஆனால் அன்றோ, இடது மணிக்கட்டில், வலது மணிக்கட்டில் ஓடுகின்ற நாடிகளை ஓரிரு நிமிடங்கள் தம் கையால் பார்த்து என்ன வியாதி என்று கண்டுபிடித்துச் சொன்னதோடு; பஸ்பங்களால், கஷாயங்களால் வியாதிகளைக் குணப்படுத்தினார்கள். அன்று, நோயாளிகள் கடை பிடித்த பத்தியங்களே பாதி வியாதியைக் குணப்படுத்தியது. இன்று ஆங்கில மருத்துவத்தில் பத்தியம் பார்ப்பதில்லை. வியாதிகளும் குணமாவதில்லை. இரத்தத்தைச் சுத்தி செய்ய-இரத்தக் கொதிப்பு ஏற்படாமல் இருக்க, சமையலில் சேர்க்கும் பூண்டு மிகவும் உதவியது. மிளகு, கபத்தைக் கட்டுப்படுத்தியது. இப்படி எல்லாம் எழுதுவதால், ஆங்கில வைத்தியத்தைக் குறை கூறுவதாக யாரும் எண்ணி விடக் கூடாது.

உடனுக்குடன் சடனாக-விரைவாகக் குணமடைய ஆங்கில வைத்தியம், இன்றைய நவநாகரீக உலகிற்கு •மிகவும் அவசியமாகிறது தேவையாகின்றது.

சுக்கு, மிளகு, திப்பிலி இந்த மூன்றையும் சமஅளவெடுத்து, தட்டி எடுத்து வறுத்துத்



## தலையால் வணங்கு...

செல்வன் கழல் ஏத்தும்
செல்வமே செல்வம்.
பொருள் பற்றை ஒழித்து
இறைவன் திருவடிகளைத்
தலையால் வணங்கினால்
தலைமை பெறுவாய் நீ.

—திருஞானசம்பந்தர்.

8

தண்ணீர் விட்டுக் கஷாயம் ஆக்கித் தினமும் அரைஅவுன்ஸ் சாப்பிட்டு வந்தால் மாரடைப்பு நோய் வரவே வராது. பொன்னாங்கண்ணிக் கீரையை சித்திரை வைகாசியில் நாள் தவறாது சமைத்து உண்டு வந்தால் பகலில் நட்சத்திரம் தெரியுமாம். கண்களுக்கு மிக நல்லது என்பதற்கே இவ்வுதாரணம்.

இன்றைய எண்ணெய்கள், நெய் முதலியன சரியான முறையில், கலப்படம் இல்லாத வகையில் தயாரிக்கப் பெற்றவையா என்பது புரியாத நிலை, இவற்றை மட்டுப்படுத்துவதாலும் மாரடைப்பு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

''உடம்பால் அழியின் உயிரால் அழிவர்

திடம்பட மெய்ஞ்ஞானம் பேசவும்மாட்டார்''

என்ற திருமூலர் திருமந்திரத்தையும் சிந்தையில் போற்றிச் சிறப்புற வாழ்தல் வேண்டும்.

வாழ்க்கை என்பது உண்மையானது. வாழ்க்கை என்பது புனிதமானது. இறப்பு என்பது அதன் குறிக்கோள் அல்ல. இதனை மானுடம் மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

உலகத்தின் உயர்விற்காக உயிரைக் கொடுப்பதுதான் தியாகம். உள்ளத்தின் வறட்சிக்காக உயிரை விடுவது தற்கொலை.

கவலையில், அமைதியும், அச்சத்தில் துணிவும், துன்பத்தில் விடுதலை விருப்பும், முடிவு செய்வதில் முற்போக்கும், சோதனையில் உறுதியும், மன்னிப்பில் மகிழ்ச்சியும், நன்றிசெலுத்துவதில் எல்லையற்ற நிலையும்ஏற்படவேண்டும். இவைகள் எல்லாம்விஞ்ஞானத்தால்உண்டாக்க முடியாது. மெய்ஞ்ஞானத்தால் மட்டுமே உண்டாக்கக் கூடியவை.

ஒரு காவியம் பிறக்கக் காதலும் வீரமும் அடிப்படைச் செயல் என்பதில்லை.

நோன்பும், தொண்டுங் கூடக் காவியம் பிறக்க வழி செய்யும், அதற்குச் சான்றாக மணிமேகலை விளங்கினாள்?

அவள் பிறந்தாள்-தெய்வம் பிறந்தது.

அவள் பிறந்தாள்-அருள் பிறந்தது.

அவள் பிறந்தாள்-தொண்டு பிறந்தது.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்—
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் பெறும்'.

இன்றைய விஞ்ஞானத்தை, அதன்வளர்ச்சியை அதன் பரிணாமத்தை அழிவிற்குப் பயன்படுத்தாமல், நாம் பெற்ற மெய்ஞ்ஞானத்தின் மூலமாக, ஆக்கத்திற்கு, உயர் ஊக்கத்திற்குப் பயனாக்கி, நாமும் வாழ்வோம்-உலகத்தையும் வாழ வைப்போம்.

மானுடம் வளர்ந்து வாழ்ந்து

தெய்வமாக உயரட்டும்.

# திருநாவுக்கரசர் ஏன் சமண சமயம் புகுந்தார்!

மு. கிருட்டிணன், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு)

திருமுனைப்பாடி வளநாட்டில் தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருவாமூரில் பெருமை திகழ வாழ்ந்து வந்த புகழனாருக்கும் மாதினி யாருக்கும் திலகவதியார் பிறந்து சிலஆண்டுகள் அகன்றதன் பின் மருள்நீக்கியார் அவதாரம் செய்தார். திலகவதியாருக்குப் பன்னிரண் டாண்டுகள் நிறைவானதும் கலிப்பகையாரை மணம் பேசி முடித்தனர். வடபுலத்தாருடன் போர் மூளவே கலிப்பகையார் போர்புரிய மன்னவனால் அனுப்பப்பட்டார். நெடு நாட்கள் போர் நடந்தது. இதற்கிடையில் தீய அரும்பிணியுழந்து புகழனார் விண்ணுலக டைந்தார். மனைவியார் மாதினியார் கற்பு நெறி வழுவாமல் கணவருடன் சென்றார்.

தாய் தந்தையர் இறந்த சில நாட்களில் மணம் பேசப்பட்ட கலிப்பகையார் போர்க் களத்தில் உயிர் துறந்தார். இதனை அறிந்த திலகவதியார் மணம் பேசி முடிவு செய்யப் பட்டிருந்ததால், தான் கலிப்பகையாருக்கே உரியவள் என்று தன் உயிரைத் துறக்க முனைந் தார். மருள் நீக்கியார் அவர் கால்களில் விழுந்து வணங்கி அவருக்கு முன் தான் உயிர் துறப்பதாகக் கூறினார். ''தம்பியார் உள ராக வேண்டும்'' என வைத்த தயாவினால்' உயிர் துறக்காது இம்பர் மனைத்தவம் புரிந்து வாழ்ந்து வந்தார் திலகவதியார்.

மனத்துயர் ஒழிய மருள் நீக்கியார் பல அறங்கள் செய்து வாழ்ந்து வரும் நாளில் 'நிலையா வாழ்க்கை அல்லேன்' என்று அறத் துறந்து சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்து நம்பர் அருளாமையினால் கொல் லாமை மறைந்துறையும் அமண் சமயம் புகுந் தார்.

தெய்வச் சேக்கிழார் திருவாக்கின்படி மருள் நீக்கியார் சமயங்களின் நல்லாறு தெரிந்து நம்பர் அருளாமையினால் சமண் சமயத்திற்குச் சென்றார். (பெ. பு. பாடல் 37). ஆனால் திருநாவுக்கரசர் (சிவபெருமான் மருள்நீக்கி யாரை ஆட்கொண்ட பிறகு இத்திருப்பெயரை சூட்டினார். பெ. பு. பாடல் 74) தனது திருச் சேறை திருநேரிசைப்பாவில் தான் சமண் சமயத்தை மேற்கொண்டதற்குக் காரணம் விளக்கியுள்ளார். அப்பாடலைப் பார்ப்போம்.

ஓர்த்துள வாறுநோக்கி யுண்மையை யுணரா
ராகுண்டர்
வார்த்தையை மெய்யென்றெண்ணி மயக்கில்
வீழ்ந் தழுந்துவேனைப்
பேர்த்தெனை யாளாக்கொண்டு பிறவி வான்
பிணிகளெல்லாம்
தீர்த்தருள் செய்தார்சேறைச் செந்நெறிச்
செல்வனாரே''

நான்காம் திருமுறை - பாடல்

உண்மையை யுள்ளவாறு நோக்கி ஆராய்ந்து உணராத அதாவது சைவசித்தாந்தத்தத்துவங் களை, சிவமாகிய செமபொருளை உணராத குண்டர்களின் (சமணர்களின்) பொய்யை மெய் யாகக் காட்டும் நெறியை மெய்யென நம்பி நொந்து மயங்கி அச்சமண சமயத்தில் வீழ்ந்து அழுந்திவிட்டேன் என்று தன்னை சூலை நோய் கொடுத்து சைவ சமயத்திற்கு மீட்டுக்கொண்ட சிவபெருமான் கருணையைப் போற்றுகின்றார். ஆகவே அவர் சமண் புகுந்தது சமணர்களின் வார்த்தைகளின் மயக்கினால்தான். இதைத் தான் சேக்கிழார் பெருமான் நம்பர் அருளி லாமை என்று குறிப்பிடுகின்றார் போலும்.

இந்நாளிலும் பல நம்பர் அருள்இல்லா மையால் மாற்றுக் கருத்துக்களில் மயங்கி சிவ பெருமான் திருவடிகளை நினையாது வீணே இப்பிறவியைப் பாழ்படுத்திக் கொண்டுள்ளனர். அவர்கள் வாகீசர் வாக்கை ஓர்ந்து உணர்ந்து நந்நெறியில் நின்று உய்வு பெறுவார்களாக.

## அடுத்த இதழில்




நம் தமிழக அரசின் தலைமைச் செயலாளர்
திருமந்திரச் செம்மல்

**திருமிகு டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களின்**

**"அருளாளர்களின் அருள் அனுபவம்" வரும் இதழில் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M. A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழாவில் மீன் வளத்துறையின் தலைவர் திருமிகு ஜே. பாலன் அவர்களும், குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி பா. வளர்மதி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உதவி ஆணையாளர் திரு எஸ், கோலப்பப்பிள்ளை விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்.



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் 15-8-93 சுதந்திரத் திருநாளில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு வெ. நடேசன் பால்ராஜ் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மயிலை சட்டமன்ற உறுப்பினர் திரு டி. எம். ரங்கராஜன், பி.ஏ , பி.எல், மற்றும் அறங்காவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆலய நிர்வாக அதிகாரி திரு சிதம்பரம் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்.

